
# இந்து கலாசாரம்


இலங்கையின் இந்து சமய திங்கள் வெளியீடு

மலர் 5 மார்கழி 94 - தை 95 இதழ் 4



## இம் மலரில்


- இறையருள் வேண்டுகின்றோம்
- தைப்பொங்கல்
- பொன்னம்பலவாணேச்வரர் ஆலய வரலாறு
- இந்துஆலயங்களில் கலைகளின் வளர்ச்சி
  க. பொ. த . உயர்தர மாணவருக்கு.
- திருவெம்பாவை
- உள்ளத் தெளிவே ஆன்மீகம்
- சித்தர் பாடல்கள்
- அறத்தின் ஆறு
- கிருஷ்ண அவதாரம்
- மார்கழி நீராடலும் மகளிரும்

தெகிவளை ஸ்ரீவெங்கடேச மகாவிஸ்ணு மூர்த்தி
தேவஸ்தான மண்டப வெளித்தோற்றம்.

இலங்கையின் இந்துசமய திங்கள் வெளியீடு

கோயில்களுக்குத் தேவையான
சகல எவர் சில்வர் பாத்திரங்கள், ஆராத்திகள்
மற்றும் வீட்டுப் பாவனைக்குரிய தரமான
எவர் சில்வர் பொருட்களுக்கும்

**நீங்கள்**

**நாட வேண்டிய இடம்**

**எஸ். சந்தோஷ நாடார் அன் சன்ஸ்**

217, செட்டியார் தெரு
கொழும்பு – 11

தொலைபேசி :
435732
434800

இந்து கலாசாரம்

இலங்கையின் இந்து சமய திங்கள் வெளியீடு

மலர் 5 மார்கழி 1994 - தை 1995 இதழ் 4

## இறையருளை வேண்டுகின்றோம்

காலச் சுற்றோட்டம் மிக வேகமாக போய்க் கொண்டிருக்கின்றது. 1994ம் ஆண்டு எப்படி வந்து போனது என எண்ணும் அளவு பலவித மாற்றங்களை ஏற்படுத்திச் சென்றுள்ளது. 1995ம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இந்த ஆண்டின் எதிர்பார்ப்புகள் யாவும் நாட்டில் சமாதானம் ஏற்படுமா? என்பதைப்பற்றிய தாகவே அமைந்துள்ளது. பலதரப்பட்ட மக்களும் சமாதானத்தையே நாடி நிற்கின்றனர். மேதகு ஜனாதிபதி திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க விஜய குமாரதுங்க இந்த நாட்டில் எப்படியாவது இந்த ஆண்டு சமாதானத்தை நிலைநாட்டிவிட வேண்டும் என்ற பேராவலுடன் செயற்பாடுகளை தொடங்கியுள்ளார். அவரது முயற்சி வெற்றி பெற நாட்டில் சமாதானம் தழைத்தோங்க இந்து கலாசாரம் புதிய ஆண்டில் திருவருளின் துணையை வேண்டிநிற்கின்றது.

ஒரு நாட்டின் வளர்ச்சி அந்த நாட்டில் வாழும் மக்களின் இன ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது. ஒற்றுமையில்லாத நாடு சுடுகாட்டிற்குச் சமமானது - அங்கு எல்லாம் பூச்சியமாகவே காணப்படும். அத்தகைய நிலை இலங்கையிலும் ஏற்பட இனிமேலும் இடமளிக்கக் கூடாது. புரிந்துணர்வும் அன்பும் பாசமும் கொண்டு அனைவரையும் அரவணைத்து நீடித்த சமாதான அணையைக் கட்டியெழுப்ப அனைவரும் இவ்வாண்டில் பாடுபட வேண்டும். பிரிந்தவர்கள் ஒன்று கூடுவது இயற்கை. பகை கொண்ட நாடுகள் பாசமுடன் இணைவதும் சகஜம். அத்தகைய நிலையில் பொன்னும் மணியும் முத்தும் பவளமும் இரத்தினங்களும் நிரம்பி வழிந்த நாடு நம் நாடு. பல நாட்டிலிருந்தும் வணிகர்களும் யாத்திரியர்களும் சான்றோர்களும் நம் நாட்டிற்கு வந்து வணிகம் செய்ததுடன் மட்டுமல்லாது. இந்த நாட்டின் அழகையும் புகழ்ந்து சென்றுள்ளனர். பலராலும் புகழ்ந்துரைக்கப்பட்ட இன்பத் தேன் சொரிந்த நாட்டை இனிமேலும் பலரும் இகழ்ந்து பேசி புறக்கணிக்க இடமளிக்கக் கூடாது.


ஒரு இனத்தை இன்னொரு இனம் அழித்து வாழ்ந்து காட்டியது வரலாற்றில் இல்லை. பெரும்பான்மை இனம் சிறு பான்மை இனத்தை அணைத்து அன்பு பாராட்ட வேண்டும். அவர்களுக்குள்ள குறைபாடுகளை களைந்து சரிநிகராக மதிக்க வேண்டும். இதுவே தமிழ் மக்களின் இன்றய சின்ன சின்ன ஆசையாகும். அந்த நிலையை இன்றய ஜனாதிபதி நன்குணர்ந்துள்ளார். அவரின் உணர்வுக்கு மதிப்பளித்து அனைத்து அரசியியல்வாதிகளும் கல்விமான்களும் பொதுமக்களும் உறுதுணை புரிந்தால் சமாதானம் இந்த நாட்டில் நிலை பெற்றுவிடும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து புரிந்துணர்வுடன் செயல்பட்டால் இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கே இடமில்லை. எனவே பிறந்த புத்தாண்டு சமாதானப் பாதையை திறந்துவிடும் ஆண்டாக மிளிர வேண்டும். அப்பாதையில் உள்ள கல்லையும் முள்ளையும் களைந் தெறிய அனைவரும் பாடுபட வேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமைநீங்கில் அனைவர்க்கும் தாழ்வு" என்னும் குறிக்கோளுடன் செயல்பட்டு இவ்வாண்டில் நமது நாட்டில் சாந்தி சமாதானம் நிலைபெறச் செய்வதே நமது அனைவரினதும் குறிக் கோளாக இருக்க வேண்டும். இந்து கலாசாரமும் இதற்காக பிரார்த்தனை செய்வதோடு இறையருளை வேண்டி அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

## உள்ளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| ❒ இறையருள் வேண்டுகிறோம் - ஆசிரிய தலையங்கம் | - 1 |
| ❒ மார்கழி நீராடலும் மகளிரும் - ஏறாவூர் தில்லை | - 3 |
| ❒ ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில் - சி. குமாரசாமி | - 5 |
| ❒ கிருஷ்ண அவதாரம் | - 7 |
| ❒ தைப்பொங்கல் - திலகா விவேகானந்தன் | - 9 |
| ❒ சிந்தையைக் கிளறும் சித்தர் பாடல்கள் | - 11 |
| ❒ திருவெம்பாவை - பத்மாசினி ஆறுமுகம் | - 14 |
| ❒ இந்து ஆலயங்களில் கலைகளின் வளர்ச்சி - இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு | - 15 |
| ❒ உள்ளத் தெளிவே ஆன்மீகம் - எஸ். தெய்வநாயகம் | - 17 |
| ❒ இந்துசமய அறிவுப் பரீட்சை - கே. எம். இராஜேஸ்வரி | - 19 |
| ❒ அறத்தின் ஆறு - தமிழோவியன் | - 21 |

கொழும்பு – தெகிவளை – நெடுமால்

ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணு மூர்த்தி தேவஸ்தானம்.



பக்தர்களுக்கான அன்னதான மண்டபம், இலவச கல்யாண மண்டபம், ஆகியவற்றிற்கான புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டிடத்தின் மாதிரி தோற்றம்.

சகலருக்கும் திருவேங்கடவன் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கும்

திருமதி N. இராமரத்தினம் குடும்பத்தினர்
(ஆதீன கர்த்தா)

# மார்கழி நீராடலும் மகளிரும்

ஏறாவூர் தில்லை

மார்கழி மாதம் மனதிற்கு மன நிறைவு தரும் மாதம். மழையும், முன்பனியும் உடலுக்கு குளிர்ச்சியை தருவது போல் உள்ளத்திற்கு, அமைதியையும் சாந்தியையும் தரவல்ல இனிய விரதங்களும், தரிசனங்களும் இம்மாதத்தில் நிறைந்துள்ளது. சைவசமயம் பல தாற்பரியங்களை தன்கைத்தே கொண்டுள்ளது. கார்த்திகை அபர பக்க பிரதமை தொடங்கி மார்கழி பூர்வபக்கத்து சஷ்டி வரையுள்ள காலத்தில் வினாயகரை விரதமிருந்து வழிபட்ட சைவமக்கள் விரதம் முடிந்தகையுடன் பத்து நாட்கள். சைவத்தின் முழுமுதற் பொருளாம், சிவபெருமானை போற்றிதுதித்து வழி படும் நாளும், இந்த மார்கழியில் உள்ளது. அதோடு விஸ்ணுவுக்கு உகந்த வைகுண்ட ஏகாதசியும் இதே மாதத்தில் வருவதால் முழு இந்துக்களும் மனநிறைவு காணும் மாதமாக இது மிளிர்கின்றது. இந்துக்கள் கால அடிப்படையில் மாதத்தை பிரிந்து அதன் மூலம் தங்கள் கடமைகளை செய்கின்றனர். தை மாதம் தொடங்கி வரையுள்ள காலத்தை உத்தராயண காலம் எனவும் ஆடிமாதத்தில் இருந்து மார்கழி வரையுள்ள மாதங்கள் தட்சுணுயன காலம் எனவும் வரையறை செய்துள்ளனர். இந்த தட்சுணுயன காலம். தேவர்கள் பூவுலகில் சஞ்சரிக்கும் காலம். என்றும் கூறுவர். எனவே இக்காலத்தில் வரும் மார்கழி மாதம் தேவர்களுக்குரிய மாதம் என்று கூட சொல்லாம். ஒரு மனித வருடம் ஒரு தேவ நாள். அத் தேவநாளின் பகற்காலமே உத்தராயன காலம். இராக்காலம் தட்சுணாயன காலம். மனிதர்களுக்கு ஒரு மாதம் தேவர்களுக்கு ஐந்து நாளிகை. எனவே சாதாரண இராக்காலத்தின் கடைசி பகுதி எமக்கு விடியற்கால மாவது போல. தேவர்களுக்கு மார்கழி மாதம் விடியற்காலமாகும். சிவன், விஸ்ணு, வினாயகர் போன்றவர்களை போற்றும் மார்கழியின் சிறப்பு மனம் விட்டு சொல்லும் அளவுக்கு மகிமை கொண்டது. மல்லிகையும், செண்பகமும், மணம் கமழும் இம்மாதத்தில் வரும். மார்கழி திருவாதிரையும் ஆருத்திரா, தரிசனமும், விஸ்ணுவழிபாடும், மகளிருக்கு பெரும் பாக்கியத்தை கொடுக்கவல்லன. மார்கழி திருவாதிரை என்றால் அதில் சிவனை கான முடியும் என்ற நம்பிக்கை சைவர்களிடம் நிறைந்து இருப்பதை இன்றும் கானலாம். "திருவெம்பாவை" என்றவுடன் சைவர்கள் மத்தியில் ஒரே சந்தோஷம். அதிகாலை 4 மணிக்கே நித்திரை விட்டெழுந்து குளித்து முழுகி தோய்த்துலர்ந்த ஆடைதரித்து மலர்ந்த முகத்துடனும் நிறைந்த மனத்துடனும் ஆண்டவன் சந்நிதியை நோக்கி செல்லும், பணி நமது பூர்வ ஜென்மத்தில் செய்த தவப்பணி என்றே கருத வேண்டும். சித்திரை திருவோணம் ஆனி உத்தரம், மார்கழி திருவாதிரை, மாசி சிவன்ராத்திரி, ஆவணி மூலம், மாசி, ஆவணி, பூரட்டாதி மாதங்களில் வரும் பூர்வபட்ஷ சதுர்த்தி ஆகியவை நடராஜப்பெருமானது அபிஷேக தினங்களாகும்.

மார்கழியில் வரும் திருவாதிரை நோன்பும் ஆருத்திரா தரிசனமும் மிகவும் புண்ணிய தினங்கள். மார்கழி மாதத்தில் வரும் பூசணையும் திருவாதிரை நட்சத்திரமும் சேர்ந்து வரும் காலம் தான் திருவாதிரைத் திருநாளாகும். இதனை ஆருத்திரா திருநாள் என்றும் கூறுவர் அபிஷேகப் பிரியன் சிவன், சிவபெருமானுக்குரிய இந்த திருவாதிரை நட்சத்திரம் கூடும் மார்கழி மாதம் தேவர்களுக்கு உஷக் காலமான படியால் தேவர்கள் சிவ பெருமானைக் குறித்து கடும் தவம் பூசைவழி பாடு ஆகியவற்றை என்றுமில்லாதவாறு மெய்யன்போடு ஆற்றுவார்கள் அவ்வேளையில் மானிட சரீரம் பெற்ற நாமும் சிவபெருமானை வழிபடுதல் மிகவும் முக்கியமானதாகும்.

மார்கழி மாத நீராடலை பாவை நோன்பு என்றும் கூறுவர். கன்னிப் பெண்கள் எதிர்கால வாழ்வின் சீரான அமைப்பை முன்வைத்து மாரர்கழி மாதம் முழுவதும் வைகறையில் துயில் எழுந்து "காத்யாயணி" என்னும் சக்தியை வழிபடுவார்கள் கோயில்களிலும் வீடுகளிலும் பைசாச உணர்ச்சி வராமல் தடுப்பதற்காகவும் புதுத்தெம்புடன் வாழ்க்கை சீராக்கவும் கூட்டு வழிபாடு கீர்த்தனங்கள் ஆகியவற்றைச் செய்வதுவழக்கம் இதனால் தாம் விரும்பும் மணாளன் கிடைத்து இனிய வாழ்வு மலர வழி வருக்கும் என்ற நம்பிக்கையும் இவர்கள் மனதில் உண்டு.

மார்கழியில் வரும் திருவாதிரை நோன்பு மகளிருக்கு மனக் கவலைகள் மறைந்து மனம் சாந்தியடையும். தன்மைக்கு ஆளாக்கும் தன்மை வாய்ந்தது. மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆகாயமூர்த்தமாகத் தரிசனங் கொடுக்கத் தரிசித்து அங்கிறாக்கையில் மாந்தர்கள் எல்லோரும் ஒருவர்வீட்டுக்கொருவர்போய் தோழியே எமது முழுமுதற்கடவுள் பரமசிவத்தை தோத்திரம் செய்யக் கேட்டும் நீ இன்னமும் நித்திரை செய்யலாமோ? உன் காதுகள் வதியாகாதா எழுந்திரு எனக்கூறி ஒவ்வொருவரும் தங்கள் தோழிகளை எழுப்பி நீராடி மலர்ந்த முகத்துடன் இறைவன் சன்னிதானத்துக்கு வரும் காட்சியைக் கண்ட மாணிக்கவாசகர் பெருமான் ஆனந்தமும் பரவசமும் அடைந்து அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டது பிரபஞ்ச அனுக்கிரக காரியமாக சதாசிவ மூர்த்திதிருவருளாள் மகேஸ்வர தத்துவத்திலே சக்தி மண்டலத்தில் இருந்து மனோன்மணி சர்வ பூத்தமணி பலப்பிரதனி பலவிக்ரணி காலிகரணி காளி இரவுத்திரி சேட்டை வாமை ஆகிய ஒன்பது சக்திகளும் ஒருவரை ஒருவர் முறையே குதூகலிக்க அதனால் விசுவ காரியம் நடந்து வருவதையே திருவெம்பாவையாக மாணிக்கவாசக பெருமான் ஓதி அருளினார். ஆருத்திராவுக்கு முன்னதாக பத்து நாட்கள் சிவாலயங்களில் எல்லாம் திருவெம்பாவை ஓதுவதும் உற்சவம் நடாத்துவதும் வழக்கமாயிற்று.

மார்கழி மாதத்திலே விடியற்காலந்தோறும் கன்னிப் பெண்கள் ஒன்று கூடி நீராடல் நோன்பு நிகழ்த்துவது வழக்கம். அவர்கள் அதிகாலையில் எழுந்து ஒருவரை யொருவர் துயிலெழுப்பிச் சென்று நீராடுதல் இந் நோன்பின் கவர்ச்சிகரமான நிகழ்ச்சியாகும். நீராடிய பின் நீர்க்கரையில் ஈரமணலாற் பாவை செய்து அதனைப் பூசித்து வழிபட்டு அதனிடம் தம் குறைகளை வேண்டுவர். தெய்வசக்தியாகிய பார்வதி தேவியையே அவர்கள் பாவை வடிவிற் பாவித்து வழிபடுவார்கள். அத்தெய்வசக்தியிடம் அவர்கள் செய்யும்

வேண்டுதல்களில் குறிப்பிடத்தக்கவை இரண்டு. ஒன்று நாட்டிலே மழை செழித்து வறுமை நீங்க வேண்டும் என்பது. அடுத்து தாம் தம் மனதுக்கினிய கணவரை அடைந்து சுகமடைந்து இன்புறுதல் வேண்டும் என்பது.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் இருந்த பொழுது இந்த நீராடல் நோன்பு நிகழ்ச்சியை அவதானித்தே திருவெம்பாவையை அருளினார். அந்த நோன்புக் காட்சி முழுவதையும் அவர் சிவக்காட்சியாகவும் அங்கு நிகழ்ந்த உரையாடல் முழுவதையும் சிவன் புகழ் போற்றும்வார்த்தைகளாகவும் வைத்தே இத்திருவெம் பாவையைப் பாடியருளினார். திருவெம்பாவையின் ஒன்பதாவது பாடலில் பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் உள்ள எம்பெருமானே உமது அடிமைகள் நாங்கள் ஆதலால் இந்த நீராடல் நோன்பின் பேறாக நல்ல கணவரை நாங்கள் வகித்துக்கொள்ள எங்களுடைய இந்தச் சங்கற்பம் இனிது. நிறைவேற்றத் தேவி நீர் அருள்புரிதல் வேண்டும் என்றும் பதினாறாவது பாடலில் "முகிலே நீ பராசக்தியின் உருவத்திலே தோன்றுவாயாக. பராசக்தியின் திருவடிச் சிலம்பு போல் முழங்கி வில்விடுவாயாக. பராசக்தி சிவனடியார்களுக்குப் பொழிகின்ற கருணை போலவே நீ மழையைப் பொழிவாயாக" என அவ் வேண்டுதல்கள் அமைந்துள்ளதைக்காணலாம்.

மாணிக்கவாசக சுவாமிகளின் திருவெம்பாவையிலே கன்னியர்களுக்கு இருக்கக் கூடிய கணவர் வேட்கை சிவனடியார் வேட்கையாகவும் அவர்களுக்கு நிகழக்கூடிய கர்மக் காதல் தெய்வக்காதலாகவும் அவர்கள் வரவேற்கக்கூடிய லௌகீக இனப்பேறு தெய்வீக இன்பப் பேறாகவும் தெய்வீகக் காதல் என்ற பயிர் செழித்து தெய்வீக இன்பம் என்ற விளை ஏற்படவேண்டுமே. அதற்கு சாதாரண நீர் மழை பொழிதல் மட்டும் போதாது. நீர் மழையுடன் அருள் மழையும் நிரவிக் கலந்து நிறைய நிறையப் பொழிகின்றது. இதுவே திரு வெம்பாவைப் பொருளின் தனிப் பெருஞ் சிறப்பாகும். நோன்பு தொடங்கும் நாளுக்கு முன் நாள் கன்னிப் பெண்கள் எல்லோரும் சந்தித்து பேசியிருப்பது போல் பாடல்கள் அமைத்து நாடகச் சுவை ததும்ப இறைவனின் புகழ்பாடுவது மனதிற்கு இதமூட்டுவதாக உள்ளது.

திருவெம்பாவையுடன் மகளிர் திருப்பள்ளி எழுச்சி ஓதி தெரு தெருவாக சென்று எழுப்புவதும் நடைமுறையில் உள்ளது. திருப்பள்ளி எழுச்சி என்பது இறைவனை துயில் எழுப்புவதாக அமைந்துள்ளது திருப்பாட்டுக்களை உடையது. பள்ளியெழுச்சி தொல்காப்பியம் முதலிய பண்டைய நூல்களில் துயிலெடை என வழங்கப்படுகிறது. துயிலெடையாவது தமது வீர யாக்கிரமத்தால் பகைவரை வென்று வாகை மாலை சூடி பாசறையில் எவ்வித காவலுமின்றி படுத்துறங்கும் மன்னவனைச் சூதர் காலையிற் சென்று புகழ்ந்து பாடி துயில் எழுப்புவதாகும் இத்துயிலெடை முறையினை அனுசரித்தே மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் உறையும் சிவபெருமானை விழித்து இத்திருப்பள்ளியெழுச்சியைப் பாடினால் திருப்பள்ளியெழுச்சியானது ஆணவமலம் பரியாகப்பட ஆன்மா அதனுடைய தடையினின்றும் நீங்குவதே என்றும் மல மறைப்பு இருட்டாகவும் மல நீக்கம் விடிவு ஆகவும் உருவகிக்கப்பட்டன என்று சமய ஞானிகள் சாற்றுகின்றனர்.

இத்திருவெம்பாவைக்காலத்தில் எல்லாச் சைவ ஆலயங்களிலும் திருவெம்பாவையும் திருபள்ளியெழுச்சியும் மாத்திரம் ஓதப்படும். இதிலிருந்து இவ்விரண்டும் ஓதுதல் பன்னிருதிருமுறைகள் ஓதுதற்குச் சமமாகும் என்பது ஆன்றோர் கருத்து.

இப்பொன்னாளை சைவர்களாகிய நாம் நன்னாளாகக் கொண்டு எம்பெருமான் சிவபிரானின் புகழ்பாடியும் கேட்டும் ஆலயம் சென்று வழிபட்டும் வருவது நமது துயர்களும் கண்ணீரும் அகன்று நல்வாழ்வு பிறக்க சமைக்கும் "போற்றியாம் மார்கழி நீர் ஆடவோர் எம்பாவாய்"

---

### தாயிடம் சொல்லத்துடிக்கும் சேய் (தாய், சேய்)

என் இறைவன் எனக்காகக் காத்திருக்கிறான். நான் அவனைக் காக்க வைக்க முடியாது. நான் விரைவில் புறப்பட்டுச் செல்ல வேண்டும். எனக்கு விடை கொடுங்கள். ஒரு குழந்தை தாயை நோக்கி ஓடுவதைப் போல் நானும் ஓட விரும்புகிறேன்.

–சந்த் துர்க்காராம் பாடிய கடைசி சுலோகம்–

### ரமண மகரிஷியின் உபதேச சாரம்

1. இறைவனின் சித்தத்தால் மட்டுமே ஒவ்வொரு வருக்கும் அவரவர் கர்ம பலன் கிட்டுகிறது. இதைச் செய்பவனும் அந்த ஈசுவரனே.

2. நல்வினை தீவினையின் பலாபலன்கள் நிரந்தரமானவையல்ல. இவை ஒருவனை கர்மா எனும் பெரும் கடலில் இறக்கிவிடும் – இது ஆன்மீக வளர்ச்சிக்குத் தடையாயிருக்கும்.

3. இச்சையின்றி யாற்றும் செயல்களின் பலாபலன்கள் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும். இதனால் மனம் தூய்மைப்படுவ தோடு, வீடு பேறும் கிடைக்கும்.

### குருவாயூரப்பன்

உபநிஷத ஞானத்தால் அடையப்படும். ஞானயோகமோ, இந்திரியங்களுக்குப் புலப்படாத நுட்பமாதலாலும், மனத்தினால் அடைய மிகவும் கடினமானதாலும், பிரபுவே! உம்மிடம் அன்பு வடிவான பக்தியே எப்பொழுதும் இனியதும் உயர்வற உயர்நலம் அளிப்பதாகவும் இருக்கிறது.

- நாராயணீயம் -

# ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில்

(இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் ஆங்கில சேவையில் ஒலி பரப்பப்பட்ட உரையின் தமிழாக்கம்)

– அருட்கலைத்திலகம் சி. குமாரசாமி M.A.

கொழும்பு மாநகரில், கொச்சிக்கடைப் பகுதியில், இலங்கையின் கருங்கற்கள் ஏராளமாகக் காணப்பட்ட இடங்களில் மட்டுமல்லாமல், அவை காணப்படாத இடங்களிலும் அழகிய கோயில்களை அமைத்துள்ளார்கள். உதாரணமாக, தஞ்சாவூரில் பிரகதீஸ்வரர் (பெரிய கோயில்) ஆலயமானது கருங்கல் இல்லாத ஒரு பிரதேசத்தில் கட்டப்பட்டுள்ளது. சோழ மாமன்னர் இராஜராஜன் கருங்கற்களை வேறு இடத்திலிருந்து வரவழைத்து சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் இத்கோயில் அமைந்ததன் காரணமாய் அவருக்கும், ஏன், இந்தியாவுக்கும் , பேரும் புகழும் கிடைத்தன. ஆங்கில மொழியில் உள்ள கலைக்களஞ்சியத்தில் Temple என்ற சொல்லுக்கு இக்கோவிலையே உதாரணமாக கூறப்பட்டுள்ளதை இங்கு குறிப்பிடவேண்டும்.

இலங்கையில் சமயப்பற்றும் நாட்டுப்பற்றும் மிகுதியாகக் கொண்ட வள்ளலாகிய சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இத்தகைய ஒரு கோயிலைக் கட்டினார். அவர், அதி உன்னதமான அழகுச்சிற்பங்கள் மலிந்த ஈடுஇணையற்ற ஒரு வழிபாட்டுத்தலத்தை கொழும்பு வாழ் சைவ மக்களுக்கு அளித்திருக்கின்றார். இலங்கையில் இது போன்ற அழகு வாய்ந்த ஆலயம் வேறில்லை என்றால் அதுமிகையாகாது. தூண்களிலும் ஓடைகளிலும் காணப்படும் மிகச் சிறந்த நுட்பமான சிற்ப வேலையினது அழகினை எத்தனையோ வெளிநாட்டவரும் வந்து வியந்து அவற்றினைப் புகைப்படம் எடுத்துச் செல்கின்றதை நாம் அடிக்கடிகாணமுடிகிறது. பெரும்பாலும் எல்லாத்தூண்களிலும் சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. புராணச் செய்திகளையும் காணலாம்.

## முதலியார் பொன்னம்பலம்

இக்கோயில் ஆரம்பத்தில் மானிப்பாயைச்சேர்ந்த அ. பொன்னம்பலமுதலியாரால் கட்டபபட்டு கிபி. 1857 இல் குடமுழுக்காட்டப்பட்டது. பொன்னம்பல முதலியார் இலங்கைச் சட்டநிரூபணசபையில் தமிழ் பேசும் மக்களின் முதற் பிரதிநிதியாகக் கடமையாற்றிய முதலியார் ஆ. குமாரசுவாமி அவர்களின் மருகனாவார், மேலும், புகழ்பூத்த சகோதரர்களான குமாரசுவாமி, சேர். இராமநாதன் சேர் அருணாசலம் ஆதியோரின் பெருமை மிக்க தந்தையாருமாவார். இவரது மனையாள் செல்லாச்சி அம்மையார் இள வயதில் இறைவனடி சேர்ந்து விட்ட காரணத்தால் அவர் சமய இலட்சியங்களைப் பின் பற்றித் தமது வாழ்வை சமயப்பணியில் ஈடுபடுத்தினார்.

அக்காலத்தில் கொழும்பு வாழ் இந்துக்கள் பிரேதங்களைத் தகனஞ் செய்வதற்கு இடமின்மையால் புதைக்கும் வழக்கத்தினை மேற்கொள்ள வேண்டிய தாயிற்று. இதனால் முதலியார் அவர்கள் தமது சொந்தப் பணத்தில் நிலம் வாங்கி அதனை ஓர் இந்து மயானமாக்கிய பின்னரே தகனஞ் செய்யும் முறை கொழும்பில் ஏற்பட்டது. மேலும், வழிபாட்டிற்கு ஒரு இந்து ஆலயம் இன்றிக் கவலைப்பட்ட இந்துக்களுக்காகவும் தம் மக்கள் வேற்று மதத்தில் சேருவதைத் தடுப்பதற்காகவும் சிவன் கோயில் ஒன்றை உருவாக்க வேணும் என்றும் பெரிதும் விரும்பினார். இவ்விருப்பத்தினை வலியுறுத்துவது போன்று அவர் கண்ட கனவு அமைந்தது. தான் கொழும்புத் துறைமுகத்தில் நிற்பதாகவும், எங்கிருந்தோ வந்த கப்பலில் இருந்து பிரயாணிகள் இறங்கி வருவதாகவும், அவர்களுள் ஒரு அந்தணரும் அவர் பத்தினியாரும் முதலியாரிடம் சென்று ஒரு மாதுளங்கனியை அன்போடு கொடுத்ததாகவும் அவர் அதனைக் கொண்டு சென்று வீட்டில் உடைத்துப் பார்த்போது, என்ன ஆச்சரியம்! மாதுளம் முத்துக்கள் சிவலிங்கங்கள் போல் காட்சியளித்தன. இக்கனவின் பின்னர் தமது ஆவலைப் பிற்போட அவர் விரும்பவில்லை.

## முதலியார் நிலம் வாங்கினார்

முதலியார் அவர்கள் உடனடியாகவே ஐந்து ஏக்கர் நிலம் வாங்கினார். இந்தியாவிலிருந்து ஸ்தபதிகளை வரவழைத்து சிவன் கோயில் கட்டும் வேலை ஆரம்பமாகியது. இரு ஆண்டிற்குள் வேலை நிறைவேறியது. இந்தியாவிலிருந்து ஒரு சிவலிங்கம் கொண்டு வரப்பட்டு மூலத்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அவர் தமது இல்லத்தில் வைத்துப் பூசித்த ஸ்ரீசக்கரயந்திரத்தினை அம்பாள் பீடத்தின் கீழ்வைத்து பிரதிஷ்டை பண்ணுவித்தார். கும்பாபிஷேகம் 1857 ஆண்டு சிறப்பாக நடைபெற்றது ஆலயத்தின் அருகில் சந்நியாசிகள் தங்குவதற்கும் அன்னதானம் நடத்துவதற்குமாக ஒரு மடத்தையும் கட்டுவித்தார். ஆலயத்தினை நிர்வகிப்பதற்கும் மடத்தைப் பரிபாலிப்பதற்கும் ஏராளம் பணம் ஒதுக்கி ஒரு நம்பிக்கை உறுதி எழுதுவித்தார் ஆயுள் முடிந்த பின்னர் தமது மூத்த மகனாரே இவற்றுக்குப் பொறுப்பாவார் எனக்குறிப்பிட்டார்.

பொன்னம்பல முதலியார் 1887 ஆம் ஆண்டு காலமானவுடன் மூத்த மகனார் குமாரசுவாமி பொறுப்பை ஏற்றார். ஆலயத்தையும் மடத்தினையும் செவ்வனே நடாத்திவந்தார். 1905 ஆம் ஆண்டில் அவர் காலமானவுடன் இராமநாதன் அவர்கள் கோயில் நிர்வாகத்தினை ஏற்கநேர்ந்தது. கோயிலானது செங்கற்களும் சாந்தும் கொண்டு கட்டப் பட்ட படியால் வெடிப்புக்கள் தோன்றின. இதனைக் கண்ணுற்ற சேர் இராமநாதன் கருங்கற்களால் ஒரு கோயில் எழுப்பச்சித்தங் கொண்டார்.

> " மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
> என்னோற்றான் கொல் எனும் சொல் "

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

## இராமநாதன் புதுப்பித்த கோயில்

பழுதடைந்த கோயிலை முற்றாக நீக்கி விட்டு முழுமையான கருங்கற்கோயில் அமைக்க விழைந்தார் சேர்.

இராமநாதன் அவர்கள்.


தென்னிந்தியாவுக்குப் பயண மானவர் அங்கு சிறந்த திராவிடச்சிற்பிகளை தேடிக்கண்டு அவர்களை கொழும்புக்கு வரச்செய்தார். இந்தியக் கோயில்கள் போலவே சிற்பவேலைப்பாடுகள் அமைந்த ஆலயத்தை நிறுவுவதில் கண்ணும் கருத்துமாய் இருந்த இராமநாதனை சில உறவினர்கள் ஏளனம் செய்தனர். அதாவது, மன்னர்களால் தான் இத்தகைய கோயில் அமைக்கமுடியும்; தனிமனிதனால் இது சாத்தியம் ஆகாது என்பதே! இதைக் கேள்விப்பட்டதும் அவர்ளுக்கு அவர்கூறியதாவது, இந்தியக் கோயில்கள் ஒரு மன்னனால், ஒரு காலத்தில் கட்டிமுடிக்கப்படவில்லை. ஒரு மன்னன் ஆரம்பித்தை பின் வந்தவர்கள் பூர்த்தியாக்கினார். நான் இதைத் தொடங்குகிறேன்; நீங்கள் கட்டி முடியுங்கள், என்றார், ஆனால், கருமமே கண்ணான இராமநாதன் வியாங்கொடையில் இருந்து கருங்கற்களை கொண்டு வரச் செய்து 1907 ஆம் ஆண்டில் வேலையை ஆரம்பித்தார். ஆறு ஆண்டுகள் அயரா உழைப்பின் இறுதியில் 1912 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் கும்பாபிஷேகம் வெகுவிமரிசையாய் நடைபெற்றது. வசந்த மண்டபத்தில் உற்சவ மூர்த்திகளைஅமைவதற்கு இந்தியாவிலிருந்து ஐம்பொன் விக்கிரகங்கள் கொண்டு வரப்பட்டன.

இப்போது நாம் சேர் இராமநாதன் அவர்களினால் கட்டப்பட்ட கோயிலைப் பார்ப்போம். பெரும் பாறாங்கற்பாறை ஒன்று அழுத்தம் செய்யப்பட்ட பளிங்கு போல மினுக்கப்பட்டு உயிர்க்களை ததும்பிய அழகுச் சிற்பங்களால் நிரப்பப் பட்டு சிற்பங்களின் கொலு அமைவது போல கோயில் எங்கனும் இவ்வழகுச் சிற்பங்கள் விளங்கி நிற்கின்றன. மேலும் அழகு ததும்பும் சிற்பங்களைக் கொண்ட பாரிய தூண் வரிசைகள் கூரையைத்தாங்கி நிற்கின்றன. சிற்பியினது மதி நுட்பத்தினால் செதுக்கப்பட்டகற் தொகுதிகள் பாரமற்றவை போல், ஏதோ மாயச் சக்தியினல் தொங்க விடப் பட்டுள்ளன போல் தோற்றமளிக்கின்றன. கற்களால் அமைந்த சுவர்களிலும் தூபிகளிலும் அழகு வாய்ந்த உருவங்களும் புடைப்பமைப்புக்கள் எல்லாம் கற்களால் அமைந்த சுவர்களிலும் தூபிகளிலும் அழகு வாய்ந்த உருவங்களும் புடைப்பமைப்புக்கள் எல்லாம் கலையுணர்வு கொண்டோர் கண்டு இரசிக்கத்தக் கனவாகக் காணப்படுகின்றன. நெடிது நிற்கும் கற்றூண்களில் புராணங்களில் வரும் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக கண்ணப்பநாயனார், சண்டேசுரநாயனார் போன்றோரின் காட்சிகளும் தூண்களில் காணலாம்.

## சிற்பங்கள் கூறும் கதைகள்

மேலும், சிங்கங்களில் தாங்கி நிற்பது போல கற்சங்கிலிகள் மாட்டப் பட்டுள்ளன. கோயினுள் நாம் பிரவேசித்தவுடன் இந்த விநோதத்தினை நாம் காணாமல் இருக்கமுடியாது. இவை எல்லாம் சேர். பொன். இராமநாதன் அவர்களால் வரவழைக்கப்பட்ட சிற்பங்கள் கூறும் கதைகள்!

கோயிலின் அமைப்பு, நீள் சதுரவடிவமானது. கிழக்கு-மேற்காக நீளப்பகுதியும். வட-தெற்காக அகலப் பகுதியும் காணப்படுகிறது. செதுக்கு வேலைப் பாடுகள் அமைந்த தூண்கள் கற்பலகைகளினால் அமைந்த



கூரைகளைத் தாங்கி நிற்கின்றன. அழகு வேலைப்பாடுகள் அமைந்த ஒவ்வொரு தூணைச் செதுக்குவதற்கும் நிச்சயமாக ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவாகியிருக்கும்! இத்தகைய தூண்களின் வரிசைகள் ஆலயத்திற்கு அழகைக் கொடுப்பது மல்லாமல் பார்ப்போருக்கு இந்தியக் கோயில்களின் பிரமிப்பையும் பேசாது எடுத்துக் காட்டுகின்றன.

கற்பக்கிரகத்தின் இலிங்கோற்பவ முகூர்த்தம் அதிவிசேடம் வாய்ந்தது. சுமார் மூன்று அடி உயரமான சிவலிங்கம் நன்கு மெருகிடப்பட்ட கருங்கல்லால் ஆனது. அடிமுடிதேடிய விஷ்ணு-பிரம்மா உருவங்கள் பன்றி வடிவத்திலும் அன்னம் வடிவத்திலும் காணப்படுகின்றன. மகாசிவராத்திரியன்று இவ்விலிங்கோற்பவருக்கு விசேட அபிஷேகங்களும் ஆராதனைகளும் நடைபெறுவதைப்பார்த்து வணங்குவதற்குப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கூடியிருப்பர்.

சேர். பொன் இராமநாதன் 1930 ஆம் ஆண்டு இறைவனடி எய்திய பின்னர், அவரது பெறா மகனான சேர். மகாதேவ அவர்களினால், நிறைவு பெறாதிருந்த சுற்று மதிலும் வடக்குப் பிரகாரமும் நிறைவு செய்யப்பட்டன. கோயில் தேரும் கோபுரமும் பின்னரே கட்டப்பட்டன. கோயிலைப் பரிபாலிக்க ஒரு கருமகர்த்தாசபை உண்டு. சமீபகாலத்தில் கோயில் சிவாசாரியார்கள் வசிப்பதற்கு நவீன தொடர் மாடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்போது பிரதம அறங்காவலராக இருப்பவர் திரு.டி. எம். சுவாமிநாதன் அவர்கள். வருடாந்தர உற்சவமும், நித்திய ஆறுகாலப் பூசைகளும், உற்சவர், நித்தியாக்கினி வளர்த்தல் போன்ற கிரியைகளும் தவறாது நடைபெறுகின்றன. சிவராத்திரி, சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகை, பிரதோஷம், கந்தசஷ்டி திருவெம்பாவை போன்ற விசேட விழாக்களும் நடைபெற்றுவருகின்றன. பொதுமக்களால் நித்தியநைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன. சிவஸ்ரீகுஞ்சித பாதக்குருக்கள் அவர்களின் தலைமையில் கோயில் சிறப்பாக இயங்கி வருகிறது.

# கிருஷ்ண அவதாரம்

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர தரிக்கிலானாகி தான் தீங்கு நினைந்த கருத்தைப் பிழைப்பித்து கம்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே என்றும்

பெற்றிருந்தாளையொழியவே போய் பேர்த்தொருதாயில் வளர்ந்த நம்பி என்றும்

ஸ்ரீஆண்டாள் யாரை அழைக்கின்றாள். அவர்தான் வடமதுரைப் பிறந்த மாமாயன், ஆயர்குலத்தில் தோன்றிய அணிவிளக்கு, நந்த கோபன் குமரன், யசோதை இளஞ்சிங்கம் பாற்கடலுள் வையத் துயின்ற பரமன் உலகளந்த பெருமாள் – என்று இவ்வாறு அவரைப் பற்றி அடுக்காக மொழிந்து கொண்டு போனாலும் முடிவில்லாத பெருமையுடையவன்.

**உயர்வற உயர்நலம் உடையவன்**
**மயர்வற மதிநலம் அருள்பவன்**
**அமரர்களுக்கு அதிபதி அவன்**

அவன் பரந்தாமன். பரந்தாமன் என்றால் மேலான இடத்தில் இருப்பவன் என்பது பொருள். அவன் இங்கு பக்தர்களைக்காக்க, துஷ்டர்களை நிஷ்கலிக்க, மீண்டும் தர்மத்தை நிலைநாட்ட பல்வேறு வடிவங்களைத் தாங்கி வருகின்றான். தான் விரும்பிய வடிவில் விரும்பிய பொழுது அவதரிக்கிறான். ஆனால் தன் சொந்த வடிவில் ஒருமுறை அவதரித்தான்.

## அதுவே கிருஷ்ண அவதாரம்.

அது நிகழ்ந்தது துவாபரயுகத்தின் இறுதியில் வடமதுரையில் (டெல்லியிலிருந்து 100 மைல் தொலைவில் இருக்கிறது) கம்சன் என்பவனின் மாளிகையில் ஒரு புறத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த வசுதேவருக்கும் தேவகிக்கும் மைந்தனாக அவதரித்தார். ஆவணி மாதம் நள்ளிரவு – பௌர்ணமியை அடுத்து வந்த அஷ்டமி திதி ரோகிணி நட்சத்திரம். அன்று தேய்பிறையாயினும் பகவான் அவதரிப்பதையிட்டு பூரித்துப் போன சந்திரன் அன்று பூரண நிறைவு பெற்று – அன்றைய நாளை மதி நிறைந்த நன்னாளாக்கினான். இவ்வாறே கிரகங்களும் நன்நிலையை அடைந்தன.

பிறந்தவுடன் – அந்த ராத்திரியிலேயே கண்ணன் – கோகுலத்திலேயிருந்த நந்தகோபலருடைய வீட்டிற்கு சென்று யசோதையின் மைந்தனாக பல்வேறு லீலைகளை ஆரம்பித்தான். அசுரர்களின் கொடுமையும் அதிகரித்தது. இதனால் நந்தமகாராஜாவும் மற்றைய இடையர்களும் மதுராவிலிருந்து 8 மைல் தொலைவிலுள்ள பிருந்தாவனத்திற்கு இடம் பெயர்ந்து சென்றனர். அங்கு கிருஷ்ணர் பால லீலைகள் பலவற்றைச் செய்தார்.

கோவர்த்தன மலையைக் குடையாக பிடித்து ஆயர் குலத்தைக் காத்தார். கோபிகளுடன் ராச லீலைகள் புரிந்தார். வஸ்திராபகரணம் செய்தார். இவ்வாறு எத்தனை எத்தனை லீலைகள். இன்றும் பிருந்தாவனத்தில் வாழும், மரங்களும் செடிகளும் மயில்களும் – மற்றும் ஜீவராசிகள் அனைத்தும் கிருஷ்ண உணர்வுடன் வாழுகின்றன. துவாபர யுகத்தில் பிருந்தாவனத்தில் யசோதா கிருஷ்ணராக லீலைகள் புரிந்தவர் – கலியுகத்தில் திருப்பதியில் வேங்கட கிருஷ்ணராக அருள் பாலிக்கிறார்.

பிருந்தாவனத்தில் கோபிகளின் பிரேம பக்தியைத் தழுவி – கிருஷ்ணரே எல்லாம் –

**"உண்ணும் சோறும் பருகும் நீரும்**
**தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்"** –

என்ற நிலையில்

உலகெங்கும் பரந்து வருகிறது ஹரே கிருஷ்ணா சமுதாயம். பகவானின் கலியுக அவதாரமாகிய – தங்க அவதாரமெனப்படும் ஸ்ரீ சைத்தன்ய மஹா பிரபுவின் வழியில் வந்த குருபரம்பரையில் உள்ள அருட்திரு அபய சரண் பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்களால் உலகெங்கும் இந்த கிருஷ்ண உணர்வு வெளிப்படுத்திக் காட்டப்பட்டு பரப்பப்பட்டது.

கிருஷ்ணருடன் தொடர்புடைய 'கிருஷ்ண ஜெயந்தி' ராமநவமி ஆகிய இரு பெரு விழாக்களும் இந்தியாவிற்கு மட்டும் தான் சொந்தம் என்றிருந்தது. ஸ்ரீ பிரபுபாதாவின் கருணையினால் இன்று இவ்விழாக்கள் மிக சிறப்பாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. "அண்ட சராசரங்கள் அனைத்திற்கும் வித்திட்ட தந்தை நானே" என்று கீதையில் கிருஷ்ணர் கூறியதன்படி அகில உலகிற்கும் பொதுவான கடவுளாகக் கொண்டாடப்படுகிறார் கிருஷ்ணர்.

இலங்கையிலும் ஸ்ரீல பிரபுபாதா ஸ்தாபித்த சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம் இன்று பதினெட்டு ஆண்டுகளாக கிருஷ்ண சிந்தையில் செயல்பட்டு – இவ் விழாக்களையும் வெகு விமரிசையாகக் கொண்டாடி வருகிறது. திருப்பதியில் இருந்து எழுந்தருளிய ஸ்ரீஸ்ரீராதா கிருஷ்ண மூர்த்திகள் சிறப்புடன் வழிபடப்பட்டு வருகின்றனர்.

1994 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ந் திகதி திங்கட்கிழமை கொழும்பு புதுச்செட்டித்தெருவில் அமைந்துள்ள சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம் அங்குள்ள ஸ்ரீஸ்ரீராதா கிருஷ்ண ஆலயத்தில் தனது 18வது கிருஷ்ண ஜயந்தி விழாவை மிக சிறப்பாகக் கொண்டாடியது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். ஸ்ரீஸ்ரீராதாகிருஷ்ண மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன பிருந்தாவனத்தை விட்டு ஒரு கணமும் நான் பிரிந்திருப்பதில்லை என்று கூறினார். கிருஷ்ணன் அந்த மதுரா – பிருந்தாவனத்திலிருந்து எழுந்தருளிய குழந்தைக்கிருஷ்ணரைத் தொட்டிலிலிட்டு தாலாட்டும் வைபவமும் சிறப்பாக அமைந்தது.

நள்ளிரவு 12 மணிக்கு குழந்தைக் கிருஷ்ணருக்கு பக்தர்கள் தங்கள் கைகளாலேயே வலம் புரிச்சங்கினால் பாலாபிஷேகம் செய்யும் பெரும் பாக்கியம் கிடைக்கப் பெற்றார்கள். ஸ்ரீஹரேகிருஷ்ணா இசை நாட்டியக்கல்லூரி மாணவிகள் வசு தேவராகவும்,, தேவகியாகவும் ரோகிணியாகவும், கோபிகளாகவும், மற்றும் இடையர் சிறுவர்களாகவும் வேடர்களை தாங்கி குழந்தைக்

# செய்திக் குவியல்

## சைவப் பெரியார் பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் 95வது பிறந்ததினவிழா

"பண்டிதமணி ஐயா எமக்கெல்லாம் வாழ்வளித்த தெய்வம். அவர் அன்பும் பண்பும் நிறைந்தவர். ஐயா அவர்கள் சைவத்தமிழ் மக்களுக்கு வழிகாட்டவல்ல கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவர். அவரது எழுத்துக்களை பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை நூல் வடிவில் வெளியிட்டு உதவி வருவது பெருஞ்சாதனையாகும்" என்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தொண்ணூற்றைந்தாவது பிறந்த தின விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி விழா தொடங்குவதற்கு முன்பு கல்லூரி வளவில் அமைந்துள்ள இராமநாதேசுவரர் ஆலயத்தில் விசேட பூசை நடைபெற்று பண்டிதமணியின் உருவப்படமும் அவர் ஆக்கிய பாஷை, இலக்கணம், இலக்கியம் கற்பித்தல் என்ற நூலும் மங்கள வாத்தியத்துடன் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்து வரப்பட்டன.

ஊர்வலத்தில் பண்டிதமணியின் பழைய மாணவர்கள், கல்விமான்கள், அபிமானிகள், துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். மண்டப வாயிலில் மூதறிஞர் பண்டிதர் மு. கந்தையா, இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைத் தலைவர் பண்டிதை பொன். பாக்கியம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தேவார இசைமணி எஸ். ஆர். திருஞானசம்பந்தரின் பஞ்ச தோத்திரத்துடன் ஆரம்பமான இவ்விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை உறுப்பினர் வே. தனபாலசிங்கம் வரவேற்றுப் பேசினார்.

திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்தச் சபைத் தலைவர் ஆ. மகாலிங்கம் தொடக்கவுரை நிகழ்த்துகையில் ஞானப் பிரகாசர் நல்லை நகர் நாவலர் போன்றோரின் வரிசையில் இந்த நூற்றாண்டில் சைவத் தமிழ் வளர்ச்சிக்கு உழைத்த பெருமை பண்டிதமணியையே சாரும் என்றார்.

பிறந்த நாள் உரை நிகழ்த்திய கவிஞர் இ. முருகையன் பண்டிதமணிக்கு வந்த புகழ் தானாய் வந்தது. அவர் தேடிப் போகவில்லை. வருந்தி அழைத்துக் கொண்டதுமல்ல. அவர் புகழ் இயல்பாய்த் தோன்றி எழுந்தது. எனவே, அதைப் பற்றிய வினா விடைகள் வேண்டாதவையாகும் என்றார்.

இவ்விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக பண்டிதமணியின் பாஷை இலக்கணம் இலக்கியம் கற்பித்தல் என்ற நூலை வெளியிட்டு வைத்த பலாலி ஆசிரிய கலாசாலை உப அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் "பண்டிதமணியின் நூல் ஆசிரியர்களுக்கும் மேல் வகுப்பு மாணவர்களுக்கும் அரியதொரு வழிகாட்டி" என்றார்.

பண்டிதமணியின் இந்நூல் இந்தக் காலத்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இலக்கண, இலக்கிய உத்திகளை உய்த்துணர்வதற்கான பெரிய பொக்கிஷம் என நூலினை அறிமுகஞ் செய்த போது பண்டிதர் க. உமாமகேஷ்வரன் சுட்டிக்காட்டினார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் ஆக்கமாகிய இந்நூலின் முதல் பிரதியை யாழ். மாவட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அவர்களும் சிறப்புப் பிரதியை உரும்பராய் இந்து சமய அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி. சிவப்பிரகாசம் அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

எண்டிசையும் புகழ் பண்டிதமணி என்ற தலைப்பில் பல்வேறு சந்தங்களிலும் இராகங்களிலும் அமைக்கப் பெற்ற கவி அமுதத்தை இயலிசை வாரிதி இணுவில் ந. வீரமணி ஐயரால் பாடப்பட்டது.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைக் காரியதரிசி ஆசிரியர் மணி அ. பஞ்சாட்சரம் நன்றியுரை கூறினார்.

---

(முன்பக்க தொடர்ச்சி)

கிருஷ்ணரைச் சுற்றி காவலாக இருந்தமை இன்னும் சிறப்பான அம்சமாக இருந்தது. மாணவ மாணவிகளின் வீணைவாத்தியம் புல்லாங்குழலோசை வயலின் இசை –நடனங்கள் கிருஷ்ணரை மகிழ்வித்தன பக்தர்களின் விசேட இசைக்கச்சேரிகள், பஜனைப்பாடல்கள் மேளவாத்தியங்கள் அனைத்தும் சேர்ந்து–பகவான் அருளால் ஹராத கிருஷ்ணஆலய கிருஷ்ண ஜெயந்திவிழா மிக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கருப்பஞ் சாற்றுக்கட்டி எவர் தின்றாலும் கசக்காது. வேப்பங்காய் தேவர்களே தின்றாலும் கசக்கும். அது போல தகுதியுடையவர்களும், அல்லாதவர்களும், எப்பொழுதும் தங்களது இயல்பான குணத்தில் குறைதல் இல்லாதவர் ஆவர்.

–நாலடியார்–

# தைப்பொங்கல்

திலகா விவேகானந்தன்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்று மக்கள் கூறுவதைப் பலதரம் கேட்டிருக்கிறோம். இவ்வாசகமானது மனத்தை ஆறுதல்ப்படுத்தும், மனிதருக்கு நம்பிக்கையூட்டும் ஒரு மனிதாபிமான செவ்வாசகம் – உண்மை. ஆனால் எப்படி வழி பிறக்கும் சற்றுச் சிந்திப்போம். மனக்கண்ணில் தெரிவதென்ன நல்நெற்பயிர்களால், பச்சைக்கம்பளம் விரித்தாற் போலிருந்த வயல்களில், இப்போ தெட்டத் தெளிவாக ஒற்றையடிப் பாதைகள் பல குறுக்கும் நெடுக்குமாகச் செல்வதை பார்க்கிறோம். தைபிறக்க இவ்வழி பிறந்தது. இம்மாற்றத்தை ஏற்படுத்தியவர் யார்

## சூரியன்

வானத்தில் ஒற்றைக் கல்போல் இருப்பவன், ஆத்ம ஜோதி வடிவமான அகண்ட ஜோதி என்ற காயத்திரி மந்திரத்தில் கூறப்படும் சாட்ஷாத் சூரிய பகவானே இவ்வாறு வழிகள் பிறக்கக் காரணமாகிறான். ஈசனின் நெற்றிக்கண் போல் விளங்கும் சூரியன் தன் வெங்கதிர்களின் செறிவு கூடக்கூட லேசர் கதிர்கள் போல் கிருமி சங்காரம் செய்கிறான். அதுமட்டுமா இளம் நெற்கதிர்களுக்கு பச்சை இலைகளினூடு ஆதி சக்தியை யூட்டி, நெல் மணிகள் தோன்றவும், நெற்கதிர்கள் முதிரவும், உதவுகிறான். இந் நெற்கதிர்களே எமக்கு பிரதான உணவாகின்றன. அதாவது – சூரிய பகவானின் கருணையால், கடாட்சத்தால் – உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரல்லவா. ஆகவே உயிர் கொடுத்தோரை நன்றியுடன் நினைவு கூறும் நாளாக தை மாதப் பிறப்பன்று, சூரியனுக்குப் பொங்கிப் படைத்துக் கொண்டாடுவது தமிழர் மரபு. தை மாதத்தில், தூங்கு பனி நீரை வாங்கு கதிரோன் கிழக்கில் உதிக்க அவனுக்கு நாம் பொங்கல் தயாரிக்கிறோம்.

## சூரியனுக்குப் படைத்தல்

வென் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், பால் பழம் நெய், வெற்றிலை ஆகியவற்றையும் சூரியனுக்குப் படைக்கிறோம். இவை எல்லாவற்றையும் நாம் அனுபவிக்கக் காரணமான சூரியபகவானுக்கு நாம் அவற்றை நன்றியோடு படைக்கிறோம். சூரியன் ஒரு நட்சத்திரம். அதற்கு ஏன் உணவு? கேள்வி எழுகிறதா மனத்தில்? ஒரு பிள்ளை தன் முதற் சம்பாத்தியத்தில், தன் நன்றியைத் தெரிவிக்கு முகமாக தன் பெற்றோருக்குத் துணிமணிகள் வாங்கிக் கொடுப்பதைக் கண்ணாரக் கண்டிருக்கிறோம். ஏன்? தந்தை தாய்க்கு வழியில்லையா தமக்கு வேண்டியதை வாங்க அவ்வாறே நாமும் பகவானுக்குப் படைக்கிறோம். எமது நன்றியே மனத்தில் பொங்கலாக எழும் நேரம் அது.

## வரவேற்பு

உணவு மட்டுமல்ல பூரண கும்பம் வைத்து, திருவிளக்கேற்றி சூடம், சாம்பிராணி, சந்தனக் கூறுகள் சகிதம் சூரிய பகவானை மதிப்போடு அமோகமாக வரவேற்கிறோம், தினமும் வரும் தினகரனே! உம்மாலன்றோ இன்று நாம் பசிதீர வாழ்கிறோம். நும் கருணையால் முதிர்ந்த நல்லரிசியை உமக்கே முதற்கண் நன்றியுடன் அளிக்கிறோம் என்று போற்றி வணங்குகிறோம். இதுவே தைப்பொங்கல் என்னும் தமிழர் பண்டிகையாகும்.

## பொங்கலோ பொங்கல்

விடி காலையில் வானொலி பொங்கலோ பொங்கல் என்று பாடும் வேளையில், வீட்டுப் பெண்கள் எழுந்து நீராடி முற்றத்தில் கோலங்கள் போட்டு களிமண்ணும், சாணமும் கொண்டு பிடிக்கப்பட்ட மூன்றடுப்புகளையும் பெரிய கோலத்தின் வட கிழக்கு மூலையில் வைப்பார்கள். உலையில் வைத்த நீர் கொதிக்க, வீட்டுத் தலைவன் வேளாண்மை செய்பவர் அரிசியை இரண்டு கைகளாலும் சேர்த்து எடுத்து அப்படியே, பானையை மூன்று தரம் சுற்றி சூரியனைப் பார்த்து வணங்கி நீரிலிடுவார். அதன் பின் வீட்டிலுள்ள அனைவரும் அவ்வாறே மிகுதி அரிசியைப் பானைக்குள் இடுவார்கள். பின் எல்லோரும் ஆவலோடு நீர், கஞ்சி, பொங்கி வழியும் திசையைப் பார்ப்பார்கள். நல்ல விஷயங்களுக்கெல்லாம் கிழக்கும் மேற்குமாக இலைபோடுவோம் அல்லவா? பொங்கலும் கிழக்கே வடிந்தால் திருப்பி சீனவெடி கொளுத்தி மக்கள் தம் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்வார்கள்.

இனி சூரியன் உணவு உட்கொள்ள வேண்டு மல்லவா? அதற்குப்பின் தான் மற்றையோர் தலை வாழை இலையைக் கிழக்கு மேற்காகப் போட்டு, அதில் பொங்கலைப் படைப்பார்கள். படைக்கும் போது, உம்மால் ஆனது உமக்கே முதல் உரியது என்று சொல்லாமற் சொல்லி சூரியதேவனை விருந்துக்கழைப்பார்கள் வீட்டுப் பெண்கள். இந் நவக்கிரக நாயகனுக்கு உஷா, பிரத்யுஷா என்ற இருமனைவியரும், யமன், சனி, அஸ்வினி தேவர், சுக்ரீவன், கர்னன் முதலிய புத்திரர்களும், யமுனை, பத்திரை முதலிய புத்திரிகளும் உண்டு. ஏழு குதிரைகள் பூட்டிய ஒற்றைச் சக்கர வண்டியில் தினம் மேற்கு நோக்கிச் செல்லும் சூரிய பகவான், கனற் பெருஞ்சோதியாம் கதிரவன், மேருமலையை வலம் வருகிறான். பெரிய குடும்பஸ்த்தனாயிற்றே! தன் கடமையைச் செய்து வீடு நோக்கிச் செல்பவன் இறங்கி வந்தால் கால தேவனுக்கும் சங்கடம் ஆகிவிடுமே! அவன் தன் நீண்ட கிரகங்களாகிய ஒளிக்கைகளால் பொங்கலை அளைந்து செல்கிறான். இவ்வளவும் போதும் என்று மக்கள் திருப்திப்படுவார்கள்.

## பண்டிகை

இந் நந்நாள் ஆகிய பொங்கல் பண்டிகையை நம் மக்கள், குதுகலமாகக் கொண்டாடுவார்கள். புத்தாடை யுடுத்தி, கோவில் தரிசனம் பெற்று, இனசன பந்துக்களோடு நன்கு பொழுதைப் போக்கி, இனிய பொங்கலைப் போன்ற, இனிமையான நந்நாளைக் கொண்டாடுவார்கள்.

## சொல்லாமற் செய்வோர்க்கும் பொங்கல்

சொல்லாமற் செய்வோர் பெரியோர், ஆம், நாம் கேட்காமலே பாலைச் சுரந்து, பாலோடு, பாலுணவுகளான தயிர், மோர், நெய் போன்ற சுவையான உணவைக் கொடுப்பன ஆடு மாடுகளே. இவ்வாறு எமக்கு நல்லுணவைத் தானமாகக் கொடுக்கும் ஆடுமாடுகளையும் மறக்காமல் தைப்பொங்கலுக்கடுத்த நாள். பட்டியில் பொங்கி பொங்கல் பிரசாதங்களை அவற்றிற்கு ஊட்டி மகிழ்வார்கள் நம் தமிழர். இவ்வாறு தைப் பொங்கலையும் மாட்டுப் பொங்கலையும், தம் நன்றியைத் தெரிவிக்கும் முகமாகக் கொண்டாடுவதே, தமிழர் தம் நனி சிறந்த, நயம் பொருந்திய பண்பாகும்.

# இந்து கலாசாரத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள்

## பிரவுண்சன் இண்டஸ்ரீஸ்

*139, பாங்க்ஷால் வீதி*
*கொழும்பு – 11*

*தொலைபேசி*
327197

ஹரே கிருஷ்ணா

## ஹரே கிருஷ்ணா தலயாத்திரை

**தென் - வட இந்திய - 21 நாட்கள்**

**புறப்பாடு - 05. 4. 1995 திரும்புதல் - 26.04. 1995**

செல்லுமிடங்கள் : திருச்சி , ஸ்ரீரங்கம், சென்னை. திருப்பதி. புவனேஸ்வர், ஜெகநாதபுரி, கல்கத்தா சாஷிசி கோபால், சர்வதேச கிருஷ்ண பக்திக் கழக தலைமையகம் ~ மாயாப்பூர் புத்தகயா, புதுடெல்லி, ஸ்ரீ கிருஷ்ணா பிறந்த பூமி – மதுரா, பிருந்தாவன் (வட இந்தியா – ஸ்ரீ கிருஷ்ண லீலைகள் புரிந்த இடம்) அக்ரா, தாஜ்மகால், காஞ்சிபுரம் மற்றும் புனித ஸ்தலங்கள்.

விமான டிக்கட். உணவு. தங்குமிட வசதி. விசா போக்குவரத்து எல்லாமாக
இலங்கை நாணயத்தில் ரூபா 25,000/=

தொடர்பு :
ஆலயத்தலைவர்,
சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம்
188, புதுச் செட்டித்தெரு, கொழும்பு – 13
தொலைபேசி : 433325

# சிந்தையைக் கிளறும் சித்தர் பாடல்கள்

திருமதி திலகா விவேகானந்தா

ஞானிகளுக்குக் காலமேது, இடமேது, தூரமேது? இதைச் சித்தர் -

"மெய்ப் பொருள் கண்டு விளங்கு மெய் ஞானிக்குக்
கற்பங்கள் ஒதுக்கடி - குதம்பாய்
கற்பங்கள் ஒதுக்கடி"

இங்கு நான்கு யுகங்கள் - ஒரு கற்பமாகும் - அவர்கள் காலத்தைக் கடந்தவர்கள் - முன்னேயும் போவார்கள் - பின்னேயும் செல்வார்கள் H. G. வெல்ஸ் என்ற ஒரு விஞ்ஞானியின் கற்பனையில் உதித்தது ஒரு கால இயந்திரம் - Time Machine - இதில் ஏறி ஒரு கைப்பிடியைத் திருகினால் - 2000 ஆண்டுகள் முன்னே போகலாம் - அன்றி (திருப்புதைப் பொறுத்து) பின்னோக்கியும் செல்லலாம். இந்தச் சித்தர்களையோ மனித (கால) யந்திரங்கள் என்றே சொல்லலாம். பிறருக்குப் புரியாத விடயங்களைக் கண்டு - தற்காலத்திலோ, முன்னேயோ, பின்னேயோ கண்டு தம்முள் அனுபவித்துக் கொண்டிருப்போருக்கு வீணாசை தேவையில்லை.

"காணாமற் கண்டு கருத்தோடு இருப்பார்க்கு
வீணாசை எதுக்கடி? - குதம்பாய்
வீணாசை எதுக்கடி?"

என்கிறார் குதம்பைச் சித்தர். அஷ்டமா சித்திகளையும் பெற்ற சித்தர்கள் இக் காலத்திற்கு முன்னேயும் பின்னேயும் உள்ள பல காட்சிகளைக் கண்டு அனுபவித்துள்ளார்கள் - அவர்கள் அனுபவம் பகிர முடியாதன - அக்காலம் கடந்த நிலையில் உள்ளோருக்கு நம் போன்ற சாதாரண மக்களின் மனதில் எழும் வீணாசைகள் எழுமோ?

யோக நிலையில் - நிஷ்டையில் இருப்போர் ஐம்புலன்களையும் அடக்கி அந்நிலையிலிருப்பார்கள் - மூளையின் உள்ளே - ஒரு மாங்காய் வடிவுச் சுரப்பி - இதிலிருந்து சுரக்கும் பதார்த்தம் - மாங்காய்ப் பால் இருக்கும் - ஒரு ஓமோன் - மூச்சை உள்ளெடுத்து அடங்கிய நிலையில் இருக்கும் போது, உடல் இந்திரியங்களை கட்டுப்பாட்டிற்குள் - வைத்திருக்கும். இதுவே உண்மையான மோன நிலை. மலையிலிருந்து கொண்டு தவம் செய்யும் உண்மை ஞானிகளின் நிலை - ஆனால் சில வேடதாரிகளோ கள்ளுக் குடித்துவிட்டு மோன நிலையில் இருப்பது போல் பாவனை செய்வார். இதை அறிந்த சித்தர் விட்டாரா?

மெய் ஞானிகளின் புகழைப் பாடுகிறார் - மற்றையோரைச் சாடுகிறார்.

"மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப் பால் எதுக்கடி? - குதம்பாய்!
தேங்காய்ப் பால் எதுக்கடி?

எப்படி இருக்கிறது பாடல்? ஆமாம், இந்த மாங்காய் வடிவான சுரப்பியைப் பற்றி இவர் அறிந்தது எவ்வண்ணம்? அஷ்டமா சித்திகளும் செய்யவல்ல சித்தர்கள் கண்கள் மனித மூளையையும் ஊடுருவக் கூடியன பெரும் அற்புதமல்லவோ! இந்தச் சுரப்பி - கபச்சுரப்பி Pituitary Gland - ஒரு காலில் சுரப்பி இவற்றைக் கண்டு பிடித்ததே இந்த நூற்றாண்டில் தான். ஆனால் கால வரையில்லா சித்தர்கள் இதைப்பற்றி பாடியதோ - எந்தக் கற்பத்திலோ யாம் அறியோம். விஞ்ஞானமும் பிந்திவிட்டது சித்தர்களுக்கு -

"சத்தியமான தவத்தில் இருப்போர்க்கு
உத்தியம் எதுக்கடி? - குதம்பாய்!
உத்தியம் எதுக்கடி?" (- உத்தியம் - யாக வகை)

எவரும் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். தனித்திருக்கையிலும் சத்தியமே ஐயம் என்றிருக்க வேண்டும். அவ்வாறு உத்தம பாதையில் செல்வோர்க்கு யாகங்கள் அவசியமா?

"செத்தாரைப் போலத்திரியு மெய்ஞ் ஞானிக்கு
கைத்தானம் எதுக்கடி"

சித்தர்கள் 'செத்தாரைப் போல்' திரிவார்கள் - அதாவது அவர் தம் மனம் மெய் செயலற்ற நிலையில் உள்ளே சூனியத்துடன் உலா வருவார்கள் - அவர்களுக்கெதுக்கு கர்மங்கள்? - கர்மஞ் செய்ய வேண்டிய அவசியம் இஞ்ஞானிகளுக்கு அவசியமோ?

## கீதை

நாம் யார் என்று நமக்குத் தெரிவதில்லை. மாயை நம்மை மறைக்கிறது. அப்போது நம்மை நல்வழிப்படுத்தி நம்மை உணரும்படி செய்கிறார் அவதார உருவில் வந்துள்ள பகவான்.

-

–பகவத்கீதை 4வது அத்தியாயம்–

## திருக்குறள்

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலைநீ"

பூமியை ஒருவன் மண்வெட்டி கொண்டு வெட்டுகிறான், இன்னுமொருவன் அலவாங்கால் கிண்டுகிறான். பூமா தேவியின் நெஞ்சு கருணையுள்ளது - வெட்டுபவன், கிண்டுபவன் விழாமல் தாங்கிப் பிடிக்கிறாள் - தாயுள்ளத்துடன் இவ்வாறு மனிதரும் தம்மைப் பழிப்பாரை மன்னித்தல் நல்லது என்கிறார் தனக்குத் தானே சமமாயுள்ள பொய்யா மொழிப் புலவர்.

கருப்பஞ் சாற்றுக்கட்டி எவர் தின்றாலும் கசக்காது. வேப்பங்காய் தேவர்களே தின்றாலும் கசக்கும். அது போல தகுதியுடையவர்களும், அல்லாதவர்களும், எப்பொழுதும் தங்களது இயல்பான குணத்தில் குறைதல் அல்லாதவர் ஆவர்.

– நாலடியார் –

# அகில இலங்கை இந்துசமய போட்டி பரிசில் வழங்கல்

23. 12. 94



- இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கடந்த 23. 12.95 இல் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட இந்து சமயப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை கலாசார சமய விவகார அமைச்சின் இந்து சமய அலுவல்களுக்குப் பொறுப்பான மேலதிகச் செயலாளர் திரு. கா. தயாபரன் அவர்கள் வழங்குவதை எதிரேயுள்ள படத்தில் காண்க.

- இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கள் பரிசில் வழங்குவதை கீழேயுள்ள படத்தில் காண்க.



C / O Print Graphics,
4, Nelson Place,
Colombo 06
Phone: 592895.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# இந்து கலாசாரம்

அன்புடையீர்

இலங்கையின் இந்துசமய திங்கள் வெளியீடான இந்துகலாசாரம் சஞ்சிகை இப்பொழுது புதுப் பொலிவுடன் வெளிவருகிறது. நவீன கணனி முறையில் அச்சுக்கோர்க்கப்பட்டு புதிய ஒப்செட் முறையில் அச்சிடப்படுகிறது. இந்து சமயத்தின் வளர்ச்சிக்கும் சைவமக்களிடையே இந்து சமய, தமிழ் பண்பாட்டை பரப்புவதற்கும் இந்து கலாசாரம் இயன்ற முயற்சியை எடுக்கும். வருங்காலத்தில் இச்சஞ்சிகையில் பல புது அம்சங்களையும், வாசகர் விரும்பிப் படிக்கும் கட்டுரைகளையும் சேர்க்க உத்தேசித்துள்ளோம். இச்சமய வெளியீட்டின் வளர்ச்சிக்கு சைவமக்களது ஆதரவு தேவை. ஆதலால் உங்களையும் இந்து கலாசார வாசகர்களில் ஒருவராக சேர்த்துக் கொள்ள விரும்புகிறோம். கீழே உள்ள சந்தா படிவத்தை நிரப்பி ரூ.200/- செலுத்துவதன் மூலம் ஒருவருடத்திற்கு ஒவ்வொரு மாதமும் இந்து கலாசாரம் உங்களுக்கு நேரே விநியோகிக்கப்படும். இந்து கலாசாரத்தின் வளர்ச்சிக்கும் சைவசமயத் தொண்டிற்கும் உங்களது ஒத்துழைப்பை நல்குவீர்களென நம்புகிறோம்.

நன்றி

இந்து கலாசார நிர்வாகத்தினர்.

---

Print Graphics,
4, Nelson Place,
Colombo 06.

## சந்தாபடிவம்

இந்து கலாசாரம் சஞ்சிகையை ஒவ்வொரு மாதமும் வாசிக்க விரும்புகிறேன்.
தயவு செய்து கீழே கொடுக்கப்பட்ட எனது முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
இத்துடன் 1 வருட சந்தா ரூ.200 /- செலுத்துகிறேன்.

பெயர் ..............................................................................

முகவரி ..............................................................................

..............................................................................

( காசோலை / மணியோடர் மூலம் சந்தா செலுத்துவதானால்
PRINT GRAPHICS என்ற பெயருக்கு காசோலையை எழுதவும்).

# திருவெம்பாவை

பத்மாசினி ஆறுமுகம்

"மாதங்களில் நான் மார்கழி" என்பது கீதையில் கிருஷ்ணபரமாத்மா அருளிய அருள்வாக்கு மாதங்களில் சிறந்தது மார்கழி மாதம் என்பதனையே இக்கூற்று உணர்த்துகின்றது. தேவர்களுக்கு வைகறையாகக் கருதப்படும் மார்கழிமாதம் பிறந்ததுமே எல்லோரின் மனதிலும் பாவை நோன்பு நோற்பது நினைவுக்கு வருகின்றது. பாவை நோன்பு மிகப்பழைய காலத்திலிருந்து அனுட்டிக்கப்பட்டு வருகின்ற ஒரு நோன்பாகும். அது பராசக்தியை வழிபடும் நோன்பாகவே இருந்தது. மார்கழித் திருவாதிரை நாளுக்குப் பத்து நாட்களுக்கு முன்பு தொடங்கி திருவாதிரை ஈறாக இன்நோன்பு அனுட்டிக்கப்படும். இது முக்கியமாகக் கன்னிப் பெண்களால் அனுட்டிக்கப்பட்டது. அவர்கள் அதிகாலையிற் துயிலெழுந்து தமது தோழியருடன் நீராடச் செல்வார்கள். வழியில் வசிக்கும் மற்றைய தோழிமாரையும் அழைத்துத் துயிலெழுப்பி நகைச்சுவையான பாடல்களையும் பாடிக்கொண்டு செல்வார்கள். நீராடியபின் மண்ணால் ஒரு பாவை உருவத்தைச் செய்து அதனைப் பராசக்தியாக வழிபடுவார்கள். நல்ல மழைவளத்தையும் அதனால் நாடு செழிக்கவும் வேண்டுவதுடன் தமக்கு நல்ல கணவர் கிடைக்கவும் பராசக்தியை வேண்டிப் பிரார்த்தனை செய்து வழிபடுவார்கள்.

மாணிக்கவாசக சுவாமிகள் ஒருமுறை மார்கழி மாதத்தில் திருவண்ணாமலைக்குச் சென்றிருந்தார். அப்போது அதிகாலையில் கன்னிப் பெண்கள் தமது தோழியரை துயிலெழுப்பி நீராடச் செல்வதையும். அவர்கள் எள்ளி நகையாடுவதையும், அவர்களுக்கு இந்த நோன்பு நோற்பதில் இருந்த ஆர்வத்தையும் கண்டு, அவர்களது இத்தகைய பக்தி நெறியால் ஈர்க்கப்பட்டார். எனவே தானும் அந்தக் கன்னியருள் ஒருவராகப் பாவனை செய்து அவர்கள் பாடுவது போல் இருபது, தத்துவ முத்துக்கள் பதித்த பாமாலையைப் பாடி இறைவனை வாழ்த்தினார். அத்தோகுதியே இந்தத் திருவெம்பாவைப் பாடல்களாகும்.

இதில் முதல் எட்டுப் பாடல்களும் மங்கையர்கள் தமது தோழியரைத் துயிலெழுப்பும் பாடல்களாக அமைந்துள்ளன. ஒன்பதாவது பாடலில் பரம்பொருளின் அடியாரின் அடியாராக இருக்கும். தமக்கு வந்து வாய்க்கக் கூடிய கணவருக்குப் பணிபுரிவது தமக்குக் கிடைக்கக்கூடிய பெரும் பாக்கியம் என்ற கருத்தைக் கொண்டது. பத்தாவது பாட்டு இறைவனுடைய தன்மைகளை எடுத்துக் காட்டுகிறது. பதினோராவது பாட்டிலிருந்து பதினெட்டுவரை நீராடுதல் பற்றியவையாகும். பத்தொன்பதாவது பாடல் நோன்பு நோற்பதால் தமக்கு கிடைக்க வேண்டிய பயன் என்ன என்பதையும் "உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்ற சரணாகதி நிலையையும் குறிப்பிடுகிறது. இருபதாம் பாட்டு, எங்கும் வியாபித்து அனைத்துமாய் விளங்கும் இறைவனைப் போற்றித் துதிப்பதாக அமைகின்றது.

இன்று நாம் திருவெம்பாவை நோன்பை அனுட்டிக்கிறோம். பாவை நோன்பை அனுட்டித்த கன்னியரைப்போல், பெண்களும் ஆண்களும் அதிகாலையிற் துயிலெழுந்து நீராடிக் கோயிலுக்குச் செல்வார்கள். உலகமே உறங்கிக் கொண்டு இருக்கும் பிரம்ம முகூர்த்தமான அந்தநேரம் இறைவனைப் பற்றிய சிந்தனையில் ஈடுபடுவதற்கு மிகவும் உகந்ததாகும். எங்கும் நிசப்தமாக அமைதியாக இருக்கும் இந்த வேளையுல் அடியாரும் தெளிந்த சிந்தனையுடன் இறைவனைத் தியானித்து நிற்பார்கள் . பின்பு சிலர் சங்கநாதம், தாளத்தின் ஒலி, சில வேளைகளில் சேமக்கலத்தின் ஒலி ஆகிய வற்றுடன் கிராமத்தில் ஒழுங்கைகள் தோறும், அல்லது பட்டினங்களில் தெருக்கள் ஊடாகத் திருவெம்பாவைப் பாடல்களையும் தேவாரங்களையும் பாடிப் பாடிச்செல்வார்கள். இம் முயற்சி அடியாரின் பக்தியை பெருக்குகின்றது. இப்படியாக இசைக்கப்படும் இப்பாடல்கள் அப்பகுதி மக்களின் மனதில் இறைவனைப் பற்றிய சிந்தனையையும் ஆன்மீக விழிப்பையும் ஈடுபாட்டையும் தூண்டிவிடுகின்றது. அத்துடன் சிறார்களுக்கும் பிரயத்தனமின்றி சமயவாழ்க்கையில் ஆர்வத்தையும் உந்தலையும் ஏற்படுத்த உதவுகின்றது.

இந்த நோன்பின் தத்துவக்கருத்து யாது என்பதைப் பார்ப்போம். நமது ஜீவாத்மா ஆகிய கன்னிப் பெண் உண்மையிலே மும்மலங்களால், முக்கியமாக ஆணவ மலத்தினாற் பீடிக்கப்பட்டுள்ளது. அதாவது ஆணவ மலத்தில் மூழ்கிக் கிடக்கிறது எனலாம். எனவே அதனை இந்த உறக்க நிலையில் இருந்து தட்டி எழுப்பப்படுவது சுட்டிக்காட்டுகின்றது. துயிலெழும்பிய பெண்கள் நீராடுவார்கள். இது புறத்தூய்மையைக் கூறிப்பிட்ட போதிலும் அகத்தூய்மையின் முக்கியத்துவத்தை, அதாவது மும்மலங்களினின்றும் விடுபட வேண்டும் என்பதை உணர்த்துகிறது. நீராடிய பின்பு இப்பெண்கள் கோயிலுக்குச் சென்று இறைவழிபாட்டில் ஈடுபடுகிறார்கள். இதன் மூலம் ஜீவாத்மா அகத்தூய்மை பெற்று இறைவனாகிய பரமாத்மாவுக்குப் பக்தி செலுத்தி இறுதியில் அவனை அடைய முடியும் என்பதை திருவெம்பாவை மூலம் மிக உறுதியாக எடுத்துக் காட்டுகின்றார் மாணிக்கவாசகப் பெருமான்.

### *மீளவழி!*

தனது தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்பவனைக் கடவுள் மன்னித்து விடுகிறார். இது சாதாரண பூஜையாகவோ ஆழ்ந்த தியானமாகவோ இருக்கலாம். கிருத யுகத்தில் இதற்குக் கடுமையான தவம் தேவைப்பட்டது. திரேதாயுகத்தில் இதற்குத் தியாகம் தேவைப்பட்டது. துவாபர யுகத்தில் கடவுளுக்குச் சேவை செய்து மன்னிப்பு பெறப்பட்டது. கலியுகத்தில் பகவானுடைய திருநாமத்தை மீண்டும் மீண்டும் சொன்னாலே போதும். முக்தி கிடைத்துவிடும்.

–ஸ்ரீ ராமச்சந்திரப் பிரம்மச்சாரி வித்தியானந்தா–

# இந்து ஆலயங்களில் கலைகளின் வளர்ச்சி

## க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவருக்கு

ஆக்கம்: - இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு
(B. A. Dip in H. C.)

### கலைகள் யாவை

கலைகளின் வளர்ச்சிக்கு இந்து ஆலயங்கள் தோன்று தொட்டு வழங்கி வரும் பங்கு அளப்பரியது. பண்டைக் காலம் தொட்டு இசை, நடனம், சிற்பம், ஓவியம், கட்டடம் ஆகிய கலைகள் ஆலயங்களிலே வளர்ந்து வருகின்றன. கலைகளில், நுண்கலைகள் தெய்வீகமும், புனிதத்துவமும் வாய்ந்தன. எனவே இக்கலைகள் ஆலயங்களில் வளர்ந்து வருதல் சாலப் பொருத்தமானதாகும்.

### நடராஜர் உருவ தத்துவம்

ஒரு சிவாலயத்தை எடுத்துக் கொண்டால், அங்கு, பஞ்ச கிருத்திய தத்துவத்தை விளக்கி நிற்கும் நடராஜத் திருவுருவத்திலே, யாம் நாட்டிய அம்சத்தையும், சிற்பக் கலையின் எழிலையும், ஒருங்கு காண்கின்றோம். குனித்த புருவமும் கோவ்வைச் செய்வாயிற் குமிண் சிரிப்பும், பனித்த சடையும், தாக்கிய திருவடியும், துலங்கும் பொற்பாதமும் ஆலயத்தில் சிற்பக்கலையின் உயர் நிலையாக அமைகின்றதெனலாம்.

### ஆயகலைகள்

அடுத்து அங்கு பூசையின் போது ஒலிக்கும் மந்திர ஒலியிலும், நாதஸ்வர தவில் ஒலியிலும் பண்ணிசையிலும், பஞ்சபுராணத்திலும், புராண படனத்திலும் விசேட நாட்களில் இன்னிசைக் கச்சேரிகளிலும் யாம் இசையின் எழிலையும் இன்றியமையாமையையும் காண்கின்றோம். ஆலயச் சுவர்கள், விதானங்கள், திரைச்சீலைகள் ஆகியவற்றில் வண்ணக் கோலங்களாகக் காட்சி தரும் ஓவியங்கள் ஆலயத்தில் ஓவியக் கலையின் முக்கியத்துவத்தைக் காட்டி நிற்கின்றன. தூல லிங்கம் என அழைக்கப்படும் ஆலய கோபுரம், அதன் கண்ணுள்ள சிலைகள் மற்றும் தெய்வ விக்கிரகங்கள் அங்கு சிற்பக் கலையின் சிறப்பினை எமக்கு உணர்த்தி நிற்கின்றன. அடுத்து எமது உடலின் அங்க அமைப்பை ஒத்து அமைந்துள்ள ஆலயத்தின் நுணுக்கமான அமைப்பில் யாம் அங்கு கட்டடக்கலையின் கவினுறு தோற்றத்தைக் காண்கின்றோம்.

### வேத கால இறை வழிபாடு

வேத காலத்தில், ஆலயம் என்றதோர் தனிப்பட்ட அமைப்பு இல்லாத போதும் அக்காலத்தில் இடம் பெற்ற இறைவழிபாட்டில் இசை முக்கியத்துவம் பெற்றமையை யாம் காண்கின்றோம். வேத கால யாகம் வேள்விகளின் போது இசையோடு கூடி மந்திரங்கள் முழங்கின. வாத்தியங்கள் ஒலித்தன. நால் வகை வேதங்களுள் சாமகானம் இசை வடிவானதாகும்.

### பண்ணோடிசை

இதிகாச, புராண காலங்களில் இறையுடன் இசை பின்னிப்பிணைந்த சம்பவங்கள் ஏராளம். "பித்தா, பேயா என்று ஏசிய உன் வாயால் என்னைப் பாடு" என்று எம் பெருமான் தம்பிரான் தோழராகிய சுந்தரரைப் பணித்ததும், "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடு" என தில்லைச் சிற்றம் பலத்தான் மணிவாசகரைப் பணித்ததும்,

"சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன் ....."

என அப்பர் சுவாமிகள் பாடியதும் இறை, இசைத்தொடர்பை எமக்குக் காட்டி நிற்கின்றன.

பல்லவ காலத்தில், நாயன்மார்கள் ஆலயங்கள் தோறும் சென்று பண்ணோடு தேவாரப் பதிகங்கள் பாடி தமிழ் நாட்டில் பக்தி நெறி பரப்பினர். ஞானசம்பந்தரது திருப்பாடல்களுக்கு திருநீலகண்டப் பெரும்பாணர் யாழிசைத்ததும் வரலாறு.

சோழ காலத்தில், இராஜராஜசோழன், இராஜராஜேச்சரம் என்னும் தனது பெருங் கோயிலிலே திருமுறைகளைத் தினமும் ஓதுதற்கென்றே முந்நூறு ஓதுவார்களை நியமித்து, ஆதரித்ததாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

### மந்திரமும் இசையே

இந்த வகையில் இன்றும் ஆலயங்களில் மந்திர ஒலி, வாத்திய ஒலி, இசைக்கச்சேரி வடிவில் இசை மிளிர்வதை யாம் காண்கின்றோம்.

பெண்ணை விழித்துக் கேட்கிறார் ஒரு சித்தர். அவர் கேள்விகள் எம்மைச் சிந்திக்க வைக்கின்றன. இளம் பெண்ணை (குதம்பை) விழித்துப் பாடியமையால் அவர் குதம்பைச் சித்தர் என்று பெயர் பெற்றார். சித்தர்கள் வெட்ட வெளியில் திரிபவர்கள் – அவர்கள் ஈசனுடன் உரையாடுபவர்கள் – உண்மையை அறிந்தவர்கள் – வெட்ட வெளிதனில் திரிந்து திரிபவர்கள் – இறைவனை என்றும் தம் மனத்திலிருத்திச் செல்பவர்களுக்குப் பட்டங்கள் ஒரு பெண்ணே என்று கருத்துப்பட,

"வெட்ட வெளிதன்னை மெய்யென்று இருப்போர்க்குப்
பட்டயம் ஒதுக்கடி – குதம்பாய்
பட்டயம் ஒதுக்கடி –"

பாடிக் கொண்டே பரமனை அகத்தில் கொண்டே திரிகிறார்கள் இச் சித்தர்கள் – அவர்கள் வாழ்க்கைப் பாதையில் அனுபவ மூலமாக அறிந்த உண்மை அறிவை பாடல்களாய் வெளியிடுகிறார்கள்.

# உள்ளத் தெளிவே ஆன்மீகம்

– எஸ். தெய்வநாயகம் –

மனிதனுடைய மனத்தை மிகப் பக்குவமான நிலையில் வைக்கக்கூடியது ஆன்மீக உணர்வு ஆகும். மனம் கட்டுப்பட்டு விட்டால் மற்ற இயக்கங்கள் நம்மைப் பாதிப்பதில்லை. மனச்சாட்சியை மதித்து நடக்க வேண்டும் எனப் பெரியோர்கள் கூறுவது மனதின் அதாவது உள்ளத்தின் தன்மை மாறுப்படக்கூடியது என்பதால்தான்.

மனிதன் உயர்வடைவதற்கு முக்கிய தடையாக இருப்பவை கோபமும் 'தான்' என்ற அகங்காரமும் தான். ஆன்மதானத்தைப் பெறவும் இறைவனின் திருவடிகளை அடையவும் விரும்பும் ஒருவன் முக்கியமான இந்த இரண்டுக்கும் இடம் கொடுக்கக்கூடாது. ஆசை பொறாமை போன்றவை தனக்கு மட்டுமே தீங்கு விளைக்கின்றன. கோபம் கொண்டவன் முதலில் மற்றவனைத் தாக்குகிறான். இதனால் பலவிபரீதங்கள் ஏற்படுகின்றன.

தான் என்ற அகங்காரமும் மனிதனுக்குத்தோல்வியை வாழ்க்கையில் அளிக்கிறது. அதனால்தான் இறைவனை அடைந்து வாழ்க்கையில் வெற்றிபெற விரும்புகிறவர்கள் என் செயலால் ஆவது ஒன்றும் இல்லை என்று செல்வித் தம்மை தாழ்த்திக் கொண்டு இறைவனின் அருள் வேண்டிச் சரணடைகிறார்கள். இந்த மனப்பான்மை நமக்குப் பூசை செய்வதாலோ விரதம் இருப்பதாலோ வந்துவிடாது. பிறிடம் இறைவனைக் கண்டு அவர்கள் பால் மனம் உருகி அன்பால் நம்மைநாமே பிணைத்துக் கொள்ள வேண்டும். இறைவனின் தன்மையை இன்னதென்று தெரிந்து கொள்ள ஆண்டுகள் பலவெடுக்கும். ஆறே நாளில் கண்ணப்ப நாயனார் இறைவனைக் கண்டது போல நாம் ஏன் கண்டு கொள்ள முடியாது. கண்ணப்பநாயனாரின் பக்தி அத்தகையது. அவரது உள்ளம் தெளிந்த நிலையில் இருந்ததால் இறையருளை அவரால் பெற்றுக் கொள்ளமுடிந்தது. உள்ளம் மிகவும் தெளிவுநிலை கொண்டோருக்கே ஆன்மீக உணர்வின் தன்மையைப் புரிந்து கொள்ள முடியும். மனப்பக்குவமும், பொறுமையும், நிதானமும் கொண்டவர்களுக்கு இறையருள் கைக்கெட்டிவிடும் தூய வாழ்வு எல்லோருக்கும் அமைவதில்லை. அது நமது உள்ளத்தைப் பொறுத்தே அமைகின்றது.

இறைவன் உள்ளத்தில் குடி கொண்டானேயானால் நாம் எண்ணுவது எல்லாம் நடந்தேறும். ஒருவன் ஆண்டவனுக்கு அடிமையாகி களங்கமில்லாத அன்புடன் அவனை நேசித்தால் அங்கே பாவ எண்ணம் ஒரு போதும் வரமுடியாது. ஒரு குழந்தை தனது தாயைப் பற்றி எப்போதாவது தப்பான எண்ணம் கொள்ள முடியுமா? தன் செயல் எல்லாம் ஆண்டவன் திருவருள் என எண்ணும் உள்ளத்தில் ஆன்மீகம் தானாகவே தளைத்தோங்கும்.

நமது இந்து மதத்தில் பொதிந்துள்ள தத்துவக் கோட்பாடுகளையும், நம்பிக்கை உணர்வுகளையும் ஒரு தரம் புரட்டிபாருங்கள் அங்கு தென்படுவது என்ன உள்ளம், தெளிவு கொண்டு இருந்தால் அந்த தெளிவில் பிறப்பதுவே ஆன்மீகம் என்று அவைகள் அடிக்கடிகூறிவைக்கின்றன.

ஆன்மீகம் எங்கு எப்படி தோன்றுகின்றது என பலரும் கேள்விகளை கேட்கின்றனர். கூடிக் கலந்துரையாடுவதே ஆன்மீகத் தெளிவு பெறுவதற்காகவே எங்கும் எப்பொழுதும் இறைவன் இருக்கின்றான் என்பதை உணரும் உள்ளம் தீய வழிகளை நாடாது.

பக்குவம்அடைந்த உள்ளம் உடையோருக்கு இன்பமும், துன்பமும் சரிநிகராக அமையும். துன்பத்தைக் கண்டு துவண்டு விடாமலும் இன்பத்தைக் கண்டு இறுமாப்படையாமலும் இருப்பதே சிறந்த மனப்பக்குவம் கொண்டோர்களின் பண்பு ஆகும். தெளிவு நிலை ஏற்படுவதற்கு மனப் பக்குவம் மிகமிக அவசியம். மனம் என்று சொல்லும் போது அந்த மனதின் ஆழத்தில் உறைந்து கிடக்கும் அழுக்குகள் யாவும் அழித்தொழிக்கப்படல் அவசியம்.

பூசலார் நாயனார் மனத்தினில் கோயில்கட்டி இறைவனை இருத்திப் பூசித்தார் என்றால் அது எம்மால் முடியாது என பலரும் வாயைப் பிளக்கின்றனர். ஏனெனில் அன்றாடம் மனக் கோட்டைகள் கட்டி அழித்துக் கொள்பவர்கள் நாங்கள், அந்த கோட்டைகள் ஒரு நிமிடம்தானும் நிமிர்ந்து நிற்பதற்கு நமது ஆசாபாசங்கள் விட்டுவைப்பதில்லை.

இறைவன் எல்லா உயிர்களிடத்தும் இருக்கின்றான் என்றாலும் தன்னுள்ளே இறைவன் இருப்பதை உயிர்கள் உணரமுடியாமல் மாயை தடுத்துநிற்கிறது. மனிதன் தன்னுடைய அறியாமையை போக்கிக் கொண்டு தன்னை உணரும்போது இந்த மாயை அகன்று தன்னுள்ளே இருக்கும் இறைவனை அவன் தரிசிக்கத் தொடங்குகிறான். இந்த தரிசனம் மெல்ல மெல்ல அவனை ஆன்மீக உணர்வு முற்று முழுதாக உணரப்படும் போது முடிவில் தன்னிலிருந்த வேறுபட்டவனல்ல என்பதை மனிதன் உணரத் தொடங்குகின்றான்.

ஆன்மீக உண்மைகளை பண்டைய ரிஷிகள் உணர்ந்து சொன்னார்கள் அவைகளே வேதங்கள் என்ற பெயரைப் பெற்றன. ரிஷிகள் கண்ட ஆன்மீக உணர்வுகளே வேதங்கள் ஆயின. கண்டு பிடித்தவர்களைவிட வேத உண்மைகளே உயர்ந்தவைகளாகப் கொள்ளப் படுகின்றன. அழியாத உண்மைகள் இந்த மதத்தின் அத்திவாரமாக உள்ளதால் புறக்கலாசாரங்களில் உள்ள நல்லவை அனைத்தையும் அது தன்னுள் ஏற்றுக் கொண்டு மேலும் மேலும் வலிமையும் வளமும் பெற்ற மதமாக திகழ்கின்றது. இந்த இந்து மதத்தில் பிறந்த நாம் ஒரு சிறந்த இந்துவாக மிளிர்வதற்கு ஆன்மீக நெறியையும் அதில் பொதிந்துள்ள உண்மை நிலையையும் கண்டு கொண்டால் மட்டுமே இந்துவாக வாழமுடியும்.

ஆன்மா என்பது பூரணத்துவம் பெற்றது அதற்குத் துன்பமும் இல்லை, துயரமும் இல்லை மகிழ்ச்சியும் இல்லை. இந்த உண்மையைப் புரிந்து கொண்டவர்கள் தங்களுக்கு ஏற்படும் இன்பதுன்பங்களை ஒரே மாதிரியாக ஏற்றுக் கொள்கிறார்கள். இவர்கள் சமமான மனநிலையைப் பெற்றவர்கள் ஆவர். சம மனநிலை கொண்டோர் உள்ளத் தெளிவு பெற்றோர் ஆவர்.

மனம் தூய்மைப்படும் போது வாழ்க்கை நிலையில் தெளிவு பிறக்கின்றது. தெளிவான சிந்தனையும் தெய்வீக தன்மையும் கொண்ட உள்ளம் கொண்டோர் ஆன்மீக உணர்வில் சுடர்விட்டுப் பிரகாசிக்கமுடியும். உணர்வுகளையும், மனவேதத்தையும் கட்டுப்படுத்தி நிதானத்துடன் நடக்கும் தன்மை ஆன்மீக உணர்வுக்கு மட்டுமே உள்ளது.

எல்லா மதங்களிலும் ஆன்மீகம் எடுத்துரைக்கப்படுகின்றது. அந்த அந்த மதங்களின் போக்குகளுக்கு அமைய கடைப்பிடிக்கவும் படுகின்றன. ஆனால் இந்துமதத்தைப் பொறுத்த வரை மனத்தூய்மையை கொண்டே ஆன்மீகம் தெளிந்த நீரோடையாக திகழ்கின்றது என்பதை உணர்ந்து கொள்ளமுடிகின்றது. இளமைப் பருவத்து மனநிலை தெளிவுபெறும் போது அது முதிர்விலும் தூய சிந்தனையுடன் வாழப்பழகிக் கொள்ளும். இளம் மனம் தெளிவு பெற நல்ல கல்வி அவசியம் அதன் மூலமான தெளிவு இளம் உள்ளத்திற்கு கிடைக்கும் போது அன்பு கருணை மற்றவர்களுக்கு இரங்குதல் தூய எழிய வாழ்க்கைமுறை என்பன இளம் மனதிற்கு தெளிவைக் கொடுக்கின்றன. அமைதியான சூழலில் ஒருவர் வளரும் போது அவருடைய மனம் என்றும் அமைதியையே தேடிநிற்கும். நாம் பலவித எண்ணங்களையும் மன ஆசைகளையும் கொண்டு இறைவனைத் தேட முற்படலாகாது. எண்ணங்களும் ஆசைகளும் இறைவனைத் தேடும் முயற்சிக்கு எந்நாளும் தடையாகவே அமையும். மனதைத் தெளிவுபடுத்திக் கொண்டால் அந்த தெளிவே சிறந்த வாழ்க்கையை நமக்கு அமைத்துத் தரும். நாம் உள்ளத்தூய்மையுடன் ஒரு நிமிடமேனும் இறைவனை நினைக்க வேண்டும். நிறைவைத் தரக்கூடிய இறையருளைக் கான முயலவேண்டும்.

எனவே இளம் மனநிலையில் எது சரி எது பிழை என்பதை நன்கு தெரிந்து கொண்டால் அதிலிருந்து பெறப்பட்ட தெளிவு நன்றாக இருந்தால் அதுவே உள்ளத் தெளிவாக மாறி ஆன்மீக நிலைக்கு நம்மைஆளாக்கிவிடும்.

வாழ்க்கை நிலையில்லாதது என்பதை உணர்ந்து கொண்டால் இறைவன் திருவருள் நிலையை நாம் புரிந்து கொள்ளமுடியும். ஞானசம்பந்தர் வாழ்வும் அப்பர் சுவாமிகள் வாழ்வும் இறையருளைப் பெறுவதில் எவ்வளவு தூரம் செயற்பட்டன என்பதை சிந்தித்துப் பாருங்கள். சைவத்திலே பிறந்து வளர்ந்த அப்பர் சுவாமிகள் சமணசமயத்தில் சேர்ந்து வாழ்ந்தபோது இறைவன் திருவருளாள் சைவசமயத்திற்கு வந்தார். இந்த நிகழ்ச்சி ஏன் அப்பருக்கு நடந்திருக்கலாம் என்று சிந்திப்போமேயானால் திருவருளின் தெய்வீகத் தன்மையை உணர்ந்து கொள்ளமுடியும். வாழ்வு கசந்த அவர் சமயம் மாறவில்லை வாழ்க்கையில் உயர்நிலைபெற வேண்டும் எனவும் எண்ணவில்லை. ஆனால் உண்மை நிலையை திருவருளின் உயர்வைப் புரிந்து கொள்ள இறைவன் காட்டிய நாடகம் என்றே இதைச் சொல்ல வேண்டும். ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டியபோது அவர் குழந்தையாக இருந்தார். அப்பரை ஆட்கொண்ட போது வளர்ந்தவராக காணப்பட்டார். இந்த இரு நிலையிலும் வேறுபாடு அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்ப நடந்தது. நீண்ட காலம் வாழ்ந்து இறைவன் மேல் மெய்யுருகி, நெஞ்சுருகி தேவாரங்களைப்பாடி அப்பர் போல் வேறு எவரும் இருக்கமாட்டார்கள். அத்தகைய நிலைக்கு மனப்பக்குவம் வரும்வரை ஒருவரை வாழவைக்கும் தகுதி இறையருளிடம் உண்டு. அந்த இறையருள் மனதில் கொள்ளும் போது உள்ளம் தெளிவடைந்து உயர்நிலைபெற வழி சமைக்கும் அதுவே நம்மை ஆன்மீக நிலையில் உயர்த்திவிடும்.

---

(இந்து ஆலயங்களில் கலைகளின் வளர்ச்சி – தொடர்ச்சி)

சங்க காலத்தில் உலகியலோடு இணைத்துக் கருதப்பட்ட நாட்டியக்கலை, பல்லவ காலத்தில் ஆன்மவியலோடும், இறையியலோடும் இணைந்து, உற்சவ காலங்களில் ஆலயங்களில் அமைந்துள்ள நிருத்த மண்டபங்களிலேயும், சுவாமி வீதி உலாவரும் போதும் நாட்டிய நிகழ்ச்சிகளாக இடம் பெறலாயிற்று. நடனத்தோடு கூத்தும் இடம் பெற்றமைக்கு பின்வரும் வரிகள் சான்றாகும்.

"...................... நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து

– மணிவாசகர்

### சிற்பக்கலை

ஆலயங்களில் பண்டைதொட்டு வளர்ந்து வரும் சிற்பக்கலை மூலம் இறைவன் திருவுருவங்களை அமைத்து ஆலயங்களில் எழுந்தருளப் பண்ணுவது பழம் பெரும் மரபாகும். தெய்வச் சிலைகள் வணக்கத்திற்குரியனவாய், பக்தி உணர்ச்சியைத் தூண்டுவனவாய் அமைகின்றன. கோயில்கள், நிரந்தர கட்டடங்களாக அமையப் பெற்ற காலம் தொட்டு அங்கு சிற்பக்கலையும் பெருமளவு வளரலாயிற்று. தற்போது ஒவ்வோர் ஆலய ராஜகோபுரத்திலும் எழில்மிகு சிற்பங்களை யாம் காண்கின்றோம்.

### ஓவியங்கள் உணர்த்தும் பக்தி

ஆலயச் சுவர்கள், விதானங்கள் ஆகியவற்றில் புராணங்களில் வர்ணிக்கப்பட்ட இறைவனின் தெய்வீக வடிவங்களை உணர்த்தும் ஓவியங்கள், நிரந்தர கட்டட ஆலயங்கள் எழுந்த காலத்திலிருந்து தோன்றி வரலாயின. இவற்றோடு மூலஸ்தானத்தை மறைக்கும் திரைச்சீலையிலும் தெய்வ உருவங்கள் வரையப்பட்டன. துணியில் உருவம் தீட்டும் கலை மிகவும் தொன்மை வாய்ந்தது.

### கட்டிட வளர்ச்சி

எல்லாவற்றிலும் மேலாக, ஆரம்பத்தில் ஆலயங்கள் மண், மரம் ஆகியவற்றால் அமைக்கப்பட்டு, காலப் போக்கில் கட்டடக் கலையில் நுட்பத்தால் அவை கவினுறு கல்லோவியங்களாக அமைந்தன. இதற்கு தமிழ் நாட்டில் பல்லவ சோழ மன்னர் ஆட்சி காரணமாக அமைந்தன. இவர்கள் காலத்தில் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்கோயில்கள், ரதக் கோயில்கள் என ஆலயங்கள் நிரந்தர வடிவம் பெறலாயின.

### இந்துக் கோயில் ஒரு கலைக் களஞ்சியம்

இந்த வகையில் இந்துக் கோயில்களில் கலைகளின்வளர்ச்சி காண்போர்க்கு அழகுணர்ச்சியையும், பக்தி நெறியையும் ஊட்டுவனவாக அன்று தொட்டு இன்று வரை வளர்ந்து வருகின்றன என்றால் மிகையாகாது.

# SAGI TRAVELS & FILMS

**AIR TICKETING & TOUR OPERATORS**

*S21, 3rd FLOOR,*
*COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX*
*COLOMBO -11*

*Telephone : 430375,*
*430369*
*Fax : 54109*



# சுஜிகலா

கண்ணைக்கவரும் வண்ண வண்ண டிசைன்களில் லித்தோவில் அச்சிடப்பட்ட
சகல வாழ்த்துமடல்கள் – வெசாக் அலங்காரப் பொருட்கள் மற்றும்
அழகிய கலண்டர்கள் – சிங்கள ஆங்கிலடயறிகள் தயாரிப்பாளர்கள்.

**தயாரிப்பாளர்களும் – விநியோகஸ்தர்களும்**

**சுஜிகலா இன்டஸ்றீஸ்**

104/6 ஷொப்பிங் கொம்பிளக்ஸ், செட்டியார் தெரு – கொழும்பு– 11
தொலைபேசி – 541037

எமது கிளை ஸ்தாபனம் :-

**சுகன்யா புத்தக நிலையம்**

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிரபல நாவலாசிரியர்களின் சகல நாவல்கள்
கவிதைப் படைப்புக்கள் சிறுவர்களுக்கான கவிதை –கதைபுத்தகங்கள் – மற்றும்
ஸ்டேசனரிப் பொருட்கள் பாடசாலை உபகரணங்கள் அனைத்தையும் எம்மிடம் மொத்தமாகவும் –
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.வியாபாரிகளுக்கு விசேட கழிவு தரப்படும்.

**சுகன்யா புத்தக நிலையம்**

இல : 139 /1 செட்டியார் தெரு, கொழும்பு –11
தொலைபேசி : 541037 – 331734

## மாணவர்களுக்கு

# இந்துசமய அறிவுப் பரீட்சை

கே. எம். இராஜேஸ்வரி.

1 இந்துசமயத்தை வேறு எவ்வாறு குறிப்பிடுவர்?

2 "தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என சிவனடியார் பெருமை பாடிய சுந்தரமூர்த்தி நாயனாரது நூல் எது?

3 "மெய்யடியார்களுக்கு நாளும் கோளும் என்றும் நல்லவை" என்ற கருத்தை கோளறு பதிகம் மூலம் பாடியவர் யார்?

4 அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை யாரால் அருளப்பட்டது?

5 சிவசின்னங்கள் எவை?

6 நமச்சிவாய என்னும் பஞ்சாச்சர மந்திரத்தை ஓதி கல்லை தெப்பமாக்கிய நாயனார் யார்?

7 திருநீற்றுப் பதிகத்தில் திருநீற்றின் மகிமையை பாடியவர் யார்?

8 ஆலயம் என்பதன் பொருள் என்ன?

9 ஏழாந்திருமுறை பாடியவர் யார்?

10 சோமாஸ்கந்த மூர்த்தி என்றால் என்ன?

11 "சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே" என்ற தொடக்க அடியினைக் கொண்ட விநாயகர் அகவலை பாடியவர் யார்?

12 கந்தரலங்காரம், கந்தரனுபூதி பாடியவர் யார்?

13 ஈழத்தில் வாழ்ந்த சமய பெரியார்கள் யார்?

14 விசிட்டாத்வைதம் பற்றி விளக்கியவர் யார்?

15 தம்பிரான் தோழர் என போற்றப்படுபவர் யார்?

16 முருகனின் ஆறுபடை வீடு பற்றி தெளிவாக கூறும் நூல் எது?

17 ஆருத்திரா தரிசனம் எங்கு சிறப்பாக கொண்டாடப் படுகிறது?

18 திருவாலங்காட்ட மூத்த திருப்பதிகம் யாரால் பாடப்பட்டது?

19 மட்டக்களப்பு பிரதேசத்தில் புகழ்பெற்ற பிள்ளையார் ஆலயம் எது?

20 பண்டைய இலக்கியங்களில் முருகன் எந்த நிலக் கடவுளாக வழிபடப்படுகிறார் ?

21 நான்கு புருடார்த்தங்கள் எவை ?

22 சிவனுக்குரிய இரண்டு விரதங்கள் எவை ?

23 19ம், 20ம் நூற்றாண்டுகளில் நவீன இந்துமத சீர்திருத்த இயக்கங்கள் இரண்டின் பெயர் கூறுக?

24 "அர்த்தமுள்ள இந்துமதம் " இந்நூலின் ஆசிரியர் யார் ?

25 பஞ்சபுராணம் எவை ?

26 சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் எவை?

27 திருப்புகழை அருளியவர் யார்?

28 உலகம் உய்யும் வண்ணம் திருமுருகன் வந்ததைப் பற்றிக் கூறும் நூல் எது ?, அது யாரால் பாடப்பட்டது ?

29 "ஸ்ரீமாதா பராசக்தி வையம் எல்லாம் நீ நிறைந்தாய் ஸ்ரீ" என்று சக்தியின் மகிமையை பாடிய மகான் யார்?

30 தென்கிழக்கு ஆசியாவிலே உயர்ந்த கோபுரம் கொண்ட ஆலயம் எங்கு உள்ளது ?

31 ஆறுவகைச் சமயம் எவை ?

32 பாசத்தின் மூவகைகள் எவை ?

33 இருவினைகள் எவைகள்?

34 மூவகை வேதாந்தங்கள் எவை ?

35 சைவசித்தாந்த நூல்கள் எத்தனை ?

36 "வேதாந்தம்", "வேதாந்தசிரசு" என எதனைக் குறிப்பிடுவர் ?

> விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி
> இந்து கலாசாரம், 39/23 நெல்சன் ஒழுங்கை,
> கொழும்பு 3.

# OCEAN TRADES

( House of Fishing Gear )

**S / 12, 1st Floor, Colombo Central Super Market Complex**
**Colombo - 11**
**Telephone : 323906**

Importers and Distributors of Fishing Hooks and Monolines
and all other Fishing Equipment including Compasses

## BRANCHES

S - 4, 1st Floor,
Colombo Central
Super Market Complex
Telephone : 323906, 320718

S - 45, 2nd Floor,
Colombo Central
Super Market Complex
Telephone : 323906, 320718
Fax : 320718

# *Malba Ropes (Pte ) Ltd*

*Manufacturers of polyethylene & Polypropylene*
*Ropes & Nylon Fishing Nets & Twine, Kurulon*
*Twine & Ropes*

***Sales Centre :***

240, Bankshall Street
Colombo -11
Telephone : 422963, 331217

***Factory***

15 - A, Temple Road
Ekala, Ja-ela
Telepohne ; 536894

# அறத்தின் ஆறு

-தமிழோவியன்-

மனித குலம் மகிழ்வோடு வாழ; 'அறம்' எனும் அன்பு கலந்த தருமநெறி உலகில் நிலைபெறல் முக்கியம். இன்று நிலவும் அமைதி இன்மையும், இனச் சிக்கல்களும் தலை தூக்க முழுக் காரணம். அறத்தன்மையை அறவே ஆளும் பொறுப்பில் அமர்ந்திருந்தவர்கள் மறந்தமை ஆகும். மனச்சான்று - நடுவுநிலைமை - நீதி - என்றெல்லாம் பேசப்படும் மனித குண இயல்புகள், வெறுஞ் சொற்களாகவே உள்ளமையால் தான், நாட்டில் "இனபேதம்" தாண்டவம் புரிகின்றது. "இருப்போர்கள் - இல்லார்கள்" - என்ற வர்க்க வேற்றுமை நெருப்பாக எரிகின்றது. கலகமும் - குழப்பமும் ஓயாமல் தொடர்கின்றது. அறவழி அரசியல் நடந்து இருப்பின் இத்தொல்லைகள் தொடர்ந்திருக்கவே முடியாது. எல்லோரும் இன்புற்றிருப்பார்கள்.

### அறம் என்பது எது?

எனவே இங்கே நாம் "அறம்" எனும் இயல்பின் வழியாது? அதன் பொருள் என்ன? என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்வது நல்லது. அறத்தின் பொருள் "தர்மம்" என்றால, "ஈகை" எனும் இனிய பண்பு காட்டும் "கொடை"யும் அதன் உட்பொருளாகுமா?

ஆழ்ந்த சிந்தனைக்குரிய இக்கேள்விக்கு, அறிவார்ந்த அநுபவம் செறிந்த விளக்கமாக, நமக்குப் புலப்படும். பொருள் தருமே என்பதும், அதன் விரிவான நடைமுறையினால் வெளிப்படும் பொருள் "ஈகை" எனும் அறநெறியைச் சுட்டும் "கொடை"யுமாகும். இக்கருத்துரையின் தெளிவால் நேர்மையும் மனிதநேயத்தின் உணர்வு ஊக்கி இயக்கும் அன்புவழிச் செயலே அறத்தையும் கொடையையும் வேறுவேறாகக் குறிக்கும் பொருள் பொதிந்த சொற்களாகும்.

### தானம் தருமம்

"ஊர்த்தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது கடவுள் பக்தியாகுமா?"

"கொள்ளை அடித்து கோயில் கட்டுவது தெய்வப் பற்றிக்குத் தரிசனமாகுமா?"

நடைமுறையில் நாம் காணும், கடைந்தெடுத்த "கஞ்சப்பேர்வழி"கள் செய்யும் ஏமாற்று வேலைகள், தருமத்திற்கோ அன்றி கொடைக்கோ எடுத்துக் காட்டாகாது. எனினும் இத்தகைய "பம்மாத்து" பணிகள் தான்; இன்று அறச்செயலாகவும்; கொடையின் சிகரமாகவும் பெருமைப்படுத்தப்படுகின்றது. படங்களுடன் பத்திரிகைகளில் வெளியாகி, சிலருக்குப் புகழ்தரும் விளம்பரமாகவும் அமைந்து விடுகின்றது. "தானம் தருமம்" எப்படி அமைய வேண்டும் இவற்றினை எத்தகைய மக்களுக்குச் செய்வதுமுறை? எனும் கேள்விகளுக்கு பதில் இதோஎன்றுரைக்கும் வள்ளுவர்,

"வறியார்க் கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர் துடைத்து" - (குறள் 22)

- என்று ஈகை அதிகாரத்தில் முதற்குறளில் ஆர்ப்பரித்து ஆவேசமாக முழங்குவதை நோக்குவது அறச்செயலை அறியவழி காட்டும்.

இல்லாமையால் அல்லற்படும் வறியார்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே உண்மையான ஈகையாகும். மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் ஏதோ ஒரு பயனை எதிர்பார்த்து, உள்நோக்கத்தோடு, அதாவது தன்னலத்தின் முனைப்பில் கொடுக்கப்படும் தன்மை உடையது. 'ஒரு குறி'யுடன் வழங்கப்படும் 'கையூட்டு' என்னும் லஞ்சமாகும். இது தான் வள்ளுவர் காட்டும் கொடையின் விளக்கமாகும்.

இதன் அடிப்படையிலேயே, நீத்தார் பெருமையில் "அந்தணர்" எனில் அவர்கள், எல்லா உயிர்கள்பாலும் செம்மையான அருளின் நெறியோடு ஒழுகுவதால், "அறவோர்" என்பார். அவர்கள் ஒரு குலத்தார் அல்ல என்பதும் பொதுமறை தந்தவரின் மறுபொருளாகும்.

**"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்."** (- குறள் 30)

எல்லா உயிர்களிடத்தும், செந்தண்மை கொண்டு பழகுவோர்களே அந்தணராவார்கள். இவர்களையே வள்ளுவர் அறவோர் என்றுரைப்பார்.

### அறத்தின் (ஆறு) வழி

இனி அறத்தின் ஆறு எனப்படும் வழி யாது? என்பதை ஆராய்ந்தால், எமக்குப் புலனாகும் அறவழி; எல்லார்க்கும் எல்லாம் எப்போதும் கிடைத்து, நிறைந்த மனப்பூரிப்போடு வாழ்ந்தால், அங்கே தான் அறவழி முழுமையாக ஆட்சி செய்கின்றது. அன்பும் - அருளும் ஆன பண்பியல்புகள் குடிகொண்டுள்ளன - என்பதையும் அறியவும் முடியும்.

இன்று நடைமுறையில், மாட மாளிகையிலும், மகத்தான பெரிய வீடுகளிலும் வாழ்வோர்கள், எப்படியான உத்திகளினால் பொருள்வளம் பெற்று, அப்படியான உன்னதமான உல்லாச புரிகளை உருவாக்கி, உப்பரிகை வாசிகள் ஆனார்கள்? என்பதைப் பற்றி எல்லாம் கிஞ்சித்தும் ஆய்ந்தறியாமல்;

"அவர்கள் புண்ணியஞ் செய்தவர்கள். கொடுத்து வைத்த தர்மவான்கள். அது தான் இத்தகைய சுகபோகமாக வாழ்கின்றார்கள்."

- என, புண்ணியத்திற்கும் தர்மத்திற்கும் (அறவழிக்கும்) விளக்கம் சொல்வதை, நாம் கேட்டு, கேட்டு அலுத்துவிட்டோம்.

இல்லாமையாலும், இதர வசதி இன்மையாலும் மூட்டைகளைத் தூக்கி வாழும், நாட்டாண்மை வேலை செய்பவர்கள்,

கல்லுடைத்து, சுமந்து, நாலு காசு தேடிப் பிழைப்பு நடத்துவோர்கள்.

கடுமையான கூலி வேலைகள் செய்து குடும்பம் நடத்துவோர்கள்.

ஒரு காலத்தில் தோட்டங்களில் வெள்ளைக்காரத் துரைமார்களை, ஆற்றைக் கடப்பதற்கு இக்கரையிலிருந்து அக்கரைக்குத் தோளில் சுமந்து சென்றது முண்டு.

### *உத்தம சீலர்களா?*

இதெல்லாம் தர்க்கத்திற்கு இங்கே எடுத்துக் காட்டப்பட்ட காட்சிகள் அல்ல. மக்கள் ஏன் இப்படியான பரிதாபத்திற்கு இலக்கான தொழிலைச் செய்து, வயிறு பிழைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது? இச்சூழ்நிலையை உருவாக்கியவர்கள் பாவஞ் செய்யாத உத்தம சீலர்களா?

–என்பதை ஓர்ந்து, உன்னிப் பார்த்தால்; ஆதிக்கத்தின் அதிகாரம் ஆக்கிய கொடுமைதான் இது என்பது, நம்மை எதிர் கொள்ளும் உண்மையாகும்.

இன்றைய மின்னியல், உலகில் "காரில் பயணஞ் செய்வோர்கள் அறஞ் செய்தோர், கால் நடையாகப் பயணஞ் செய்வோர்கள் பாவஞ்செய்தோர்." எனும் கணிப்பிற்கு வரமுடியாது.

வள்ளுவர் காலத்தில், "பல்லாக்கில் அமர்ந்து, சுகமாகப் பயணஞ் செய்வோனையும், தோள் வலிக்க அதனைச் சுமந்து செல்வோனையும் பார்த்து, அறத்தின் பயன் – வழி இது தான் என்று சொல்ல வேண்டாம்," – என்று அறத்தாற்றிக்கு உண்மையான வழி எது? என, அறிய வைக்கின்றார்.

### *அறத்தான் வருவதே இன்பம்*

"அறத்தாறு இதுவென வேண்டா, சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"
(– குறள் – 27)

என்னும் திருக்குறளில் வள்ளுவர் இயம்பும் "சிறப்பும் செல்வமும் ஈனும் அறம்" எத்தகையது? அதன் வழியும் பயனும் எவை? என்பதை மிகவும் புரட்சிகரமாகப் புலப்படுத்துகின்றார்.

"வாழ்வதிலும் நலஞ் சூழ்வதிலும் – புவி
மக்களெல்லாம் ஒப்புடையார்.
ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ? – அதை
இன்பமெனச் சிலர் கொள்ளுவதோ?"

– என சமதர்மம் சாற்றிய பாரதிதாசன்,

"பசி என்று வந்தால் ஒரு பிடி சோறு
புசி என்று தந்து பாரப்பா!" – என இரக்கமற்றவர்களைப் பார்த்து அறஞ் செய்யத் தூண்டினார். "அறத்தான் வருவதே இன்பம்," என அறுதியிட்டுச் சொன்னார்.

இதன் நுட்பமறிந்த புரட்சிக் கவிஞன்,
"அறமி தென்றும் மறமி தென்றும்
அறிகிலாத போது – தமிழ்
இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல்
இயம்பிக் காட்ட மாட்டாயா?"

– எனப் பண்ணிசைத்து அறவழி அறியச் செய்தார். ரமண மகரிஷியின் உபதேச சாரம்

1. இறைவனின் சித்தத்தால்மட்டுமே ஒவ்வொருவருக்கும் அவரவர் கர்மபலன் கிட்டுகிறது. இதைச் செய்பவனும் அந்த ஈசுவரனே.
2. நல்வினை தீவினையின் பலாபலன்கள் நிரந்தரமானவையல்ல. இவை ஒருவனை கர்மா எனும் பெரும் கடலில் இறக்கிவிடும் – இது ஆன்மீக வளர்ச்சிக்குத் தடையாயிருக்கும்.
3. இச்சையின்றியாற்றும் செயல்களின் பலாபலன்கள் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும். இதனால் மனம் தூய்மைப்படுவதோடு, வீடு பேறும் கிடைக்கும்.

---

## திருக்குறள்

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தலை. பூமியை ஒருவன் மண்வெட்டி கொண்டு வெட்டுகிறான். இன்னுமொருவன் அலவாங்கால் கிண்டுகிறான். பூமா தேவியின் நெஞ்சு கருணையுள்ளது – வெட்டுபவன், கிண்டுபவன் விழாமல் தாங்கிப் பிடிக்கிறாள் – தாயுள்ளத்துடன் இவ்வாறு மனிதரும் தம்மைப் பழிப்பாரை மன்னித்தல் நல்லது என்கிறார் தனக்குத் தானே சமானமுள்ள பொய்யா மொழிப் புலவர்.

---

ஸ்ரீ கலியுகத்தில் நம் அனைவருக்கும் கண்கண்ட தெய்வமாக விளங்கி, தன்னை நாடிவரும் அடியார்கள் குறைகளை போக்கி, அவர்கள் வேண்டுவதை வேண்டுமுன் வாரி வழங்கும் வள்ளலாக விளங்கும் ஸ்ரீ வேங்கடவன் உறைகின்ற திருப்பதியாக விளங்குகின்றது கொழும்பு, தெகிவளை, நெடுமால் அருள்மிகு ஸ்ரீ வெங்கடேஸ்வர மகாவிஷ்ணு மூர்த்தி தேவஸ்தானம். இவ்வாலயம் பலநூறு ஆண்டுகளுக்குப்பின் புனரமைக்கப்பட்டு சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கி வந்த 15–7–1994ம் ஆண்டு இக்கோவில் கும்பாபிஷேகம் கிரியா கிரம ஜோதி, பிரதிஷ்டா சிரோன்மணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகள், மற்றும் உற்சவ காலங்களில் பல்லாயிரக்கணக்கில் பக்தப்பெருமக்களுக்கு தானங்களில் சிறந்த அன்னதானம் குறைவின்றி இவ்வாலயத்தில் நடைபெற்று வருவது இன்று நாடறிந்ததாகும்.

மேலும் பக்தர்களின் நலனுக்காக இவ்வாலயத்தை நிர்மாணித்த அதே சிற்பக்கலைஞர் பாரம்பரியம் கல்லியங்காடு விஸ்வ பிரம்ம ஸ்ரீ சி. யோகநாதன் அவர்கள் நிர்மாணிப்பில் பக்தர்களுக்கான அன்னதான மண்டபம், தெய்வீக திருமணங்களை சிறப்பாக கொண்டாட இலவச கல்யாண மண்டபம் ஆகியவற்றிற்கான அத்திவார அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை 22–01–1995 ஞாயிற்றுக்கிழமை பகல் 1–30 மணிக்கு நடைபெறும். பக்தர்களாகிய நாமும் எம்மால் இயன்ற பண உதவி, பொருளுதவிகளை செய்து இப்புண்ணிய கைங்கரிய வைபவத்தில் கலந்து சிறப்பிப்போமாக.

திரு வேங்கடவன் அடியார்

# தமிழ் மறைகள் நான்கும் சஞ்சரிக்கும் நாவான் இராவணன்

"தமிழோவியன்"

இலங்காபுரியை இராவணனின் தீரம் நிறைந்த மறத்திறமையால் விரமாநகர் என்று இலக்கியம் இயம்பும். "இரக்கமற்ற அரக்கர் குலத்து ஏந்தல் இராவணன்" என்று கம்பன் மிகைபட இகழ்ந்திருப்பினும், புலவர் குழந்தை எனும் தமிழகத்துப் பகுத்தறிவு பாசறையைச் சார்ந்த அறிவுடைமைவாதி, "இராவண காவியம்" - என்னும் காப்பியத்தில், கம்பனது கவிதைகள் காட்டும் இராவணனைவிட் மாறுபட்ட பண்பு நலன் நிறைந்த மாட்சிமையுள்ள ஆட்சியாளனாக - அரசனாக - அவனைப் பற்றிப் பாராட்டியிருப்பதைப் பார்க்கலாம்.

பேராசிரியா அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள், தனது இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும் - என்ற திறனாய்வு நூலில், இராவணனது மாட்சிமைகள் தெளிவாகச் சொல்லியுள்ளார். இறையுணர்வு கொண்ட இலங்கை வேந்தன், சிவபக்தியும், கருணையும் மிகுந்தவன். இசைப் புலமையாளன் தமிழ் மறைகள் அவன் நாவில் எப்போதும் தவழ வாழ்ந்தவன். யாழ் மீட்டுவதில் வல்லவன். இலங்கை அம் மாமன்னனின் ஆட்சியில் செழித்து, சிறந்து விளங்கியது. வாள் வலிமை உள்ளவன். திண்தோள் வலிமை செறிந்த தீரன். வஞ்சக மறியாத நெஞ்சினன்.

இவன், சிவனும் உமாதேவியும் சேர்ந்தமர்ந்திருந்த மலையைத் தன் தடந்தோளால் அசைத்தமையை ஞானப் பாலுண்டு தேவக் கானப்பால் பொழிந்த திருஞானசம்பந்தர் - திருக்கேதீச்சரப் பதிகத்தில் பாடுகையில்

"தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடி திண்தோள் - - -"

என்று குறிப்பிடு கின்றார்.

"வீரத்தமிழன் இராவணன்" - என வீறு கொண்டு பாடியிருக்கும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

"தென்றிசையைப் பார்க்கின்றேன் என் சொல்வேன் என்றன் சிந்தையெலாம் தோள்களெல்லாம் பூரிக்குதடா! அன்றந்த லங்கையினை ஆண்ட மறத்தமிழன் ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்! குன்றெடுக்கும் பெருந்தோளான்! கொடை கொடுக்கும் கையான்! ..ஜி என்று சொல்லியுள்ளமை நமது கவனத்தைக் கவர்ந்துள்ளது.

வஞ்சகவிபூஷணனின் அண்ணனென்று தன்னை
வையத்தார் சொல்லுமொரு மாபழிக்கே அஞ்சும்
நெஞ்சகனை, நல்யாழின் நரம்பதனைத் தடவி
நிறைய இசைச் செவியமுது தரும்புலவன் தன்னை,
வெஞ்சமரில் சாதல்வர நேர்ந்திடினும் சூழ்ச்சி
விரும்பாத பெருந்தகையைத் தமிழ் மறைகள் நான்கும்
சஞ்சரிக்கும் நாவானை வாழ்த்துகின்ற தமிழர்
தமிழரென்பேன் மறந்தோரைச் சழக்கரெனச் சொல்வேன்!

- என்பதைப் பாடும் போது, நமது நெஞ்சமெல்லாம் தோள்களெல்லாம் விம்மிப் பூரிக்கின்றது.

தன் வலிமை கொண்ட தோள்களினாலே இலங்கை வேந்தன் - இன்னிசைப் பாடகன் அசைத்த மலை எங்கே உள்ளது? இலங்கையிலா? இந்தியாவிலா?

நமது பெரும்பான்மை மக்கள் இராவணனைத் தங்களின் மூதாதையன் எனப் பெருமையுடன் முழக்கம் செய்து, சிலையும் வைத்துள்ளனர். இவையாவும் ஆய்விற்குரியனவாகும்.

"கம்பன் புளுகும் வால்மிகி வாய்மையும்" - எனும் தனது நூலில் பா. வே. மாணிக்கநாயக்கர், கம்பரின் "இராமாயணம்" அமைந்திருக்கும் கற்பனை வடிவத்தை தெளிவாக்கி இருப்பதும் இங்கே கவனிக்கத்தக்கதாகும்.

---

மனிதன் படிப்படியாகத்தான் வளர்ச்சி பெற்று உருவாக வேண்டும் என்று விஞ்ஞானம் கருதுகிறது. மனிதன் இறைவனின் அருளால் பிறந்தவன் என்பதால், அந்த நல்லுணர்வை அவன் பிறவியிலேயே பெற்றுவிட முடியும் என்று மெய்ஞானம் கூறுகிறது. வாழ்க்கையில் ஒரு நிலை வரை எல்லா இன்பங்களையும் தேடி அனுபவித்து விட்டு, பிறகு அது சலித்த பின் மெய்ஞானத்தைத் தேடிப் போகலாம் என்று நினைப்பது சரி அல்ல. முதலில் ஒன்றைப் போட்டு பிறகு எத்தனை பூஜ்யங்களைப் போட்டாலும் மதிப்புக் கூடிக் கொண்டே போகும். பூஜ்யத்தை முதலில் போட்டு எத்தனை எண்களைப் போட்டாலும் மதிப்பு கிடையாது.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்

## ஆண்டவன் அருள்

தெய்வத்தைத் தொழ வேண்டும் - ஏன்? உடலை வளர்க்க உதவியவர் பெற்றோர். அறிவை வளர்க்க உதவியவர் ஆசிரியர். உயிரை வளர்க்க உதவுபவர் ஆண்டவன். ஆண்டவன் அருளில்லாமல் இவ்வுலகில் எவ்வுயிரும் வாழவே முடியாது. பெற்றோர், ஆசிரியர் முதல் பூவுலகில் வாழும் அத்தனை பேரும் ஆண்டவன் அருளால் வாழ்பவர்கள் தாம். "இறைவன் இல்லை"என்பவர்களும் இறைவனருளால் தான் வாழ்கிறார்கள். உலகிலுள்ள எல்லா உயிர்களும் வாழ உயிர், உடல், உண்ண உணவு, உடை, உலாவ பூமி, நீர், நெருப்பு, காற்று, வெளிச்சம் ஆகிய அனைத்தையும் அருளோடு வழங்கியுள்ளவர் ஆண்டவனே. இதற்காக ஆண்டவன் உயிர்களிடம் எந்தவிதப் பயனையும் எதிர்பார்க்கவில்லை. அவர் விரும்புவதெல்லாம் எல்லோரும் அறநெறி ஒழுக்கத்தில் வாழ்ந்து இன்புற்றிருக்க வேண்டும் என்பதே.

ஆகவே அனைத்துக்கும் ஆதாரமாகவுள்ள ஆண்டவன் கைம்மாறு கருதாமல் நமக்குக் கருணை புரிந்து வருகிறார். அவரது ஆதரவைப் பெறுகிற நாம், நன்றிக்காகவாவது நித்தமும் அவரை வணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை மறந்து விடக்கூடாது. ஆகவே எல்லா விதத்திலும் தெய்வத்தைத் தினம் தினம் பக்தி சிரத்தையோடு வழிபட்டு முன்னேற்றமடைந்து மகிழ்வீராக.

திரு. முருக கிருபானந்த வாரியார்

## குழை தின்னி ஐயனார் - பதுளை ஆர். ஆறுமுகம்

தேயிலை, தென்னம், றப்பர் தோட்டங்களில் வாழும் தமிழர்கள், தொன்று தொட்டு சைவசமயத்தவர்களாகவே உள்ளவர்களாவார்கள். தோட்டங்கள் தோறும் காட்சி தரும் ஆலயங்கள் சைவ சமயத்தின் கடவுளையே வழிபட அமைக்கப்பட்டவை. இவைகள் ஆங்கிலேயர்களின் சொந்த நலன்களைப் பாதுகாக்கும் முனைப்பில், மதமாற்றத்தால், காலப்போக்கில் கட்டுக்குலைந்தது.

எனினும், பிறப்புமுதல் பின்பற்றி நின்ற சமயப் பிடிப்பிலிருந்து, தோட்டத்துறையைச் சார்ந்த தமிழர்களை முழுமையாக ஆதிக்க வர்க்கத்தால், சலுகைகளைக் காட்டி, தங்களது சமயத்தைச் சார்ந்தவர்களாக மாற்ற இயலவில்லை. இது சைவ சமயத்தின் பெருமைக்குச் சான்றாகும்.

சமய மரபு நெறிகளைப் பேணிடும், தோட்டமக்கள், சிறுதெய்வ வழிபாடுகளில் மிதவும் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தார்கள். மாடசாமி, மதுரைவீரன், முனியாண்டி, நொண்டியப்பச்சி, சென்டாக்கட்டி, கொம்புக்காரன் எனும் தெய்வங்களை, ஆலமரத்தினடியிலும், வேப்பமரத்தினடியிலும் கல்லையே வைத்து, காலங்காலமாகக் கரங்கூப்பி வருவது, இன்றும் காணக்கூடியதாகும். இப்படியான மலையக மக்களின் வழிப்பாட்டுத் தெய்வங்களில் குழை தின்னி ஐயனார் என்ப்வரும் ஒருவர்! இவரை மலைகளுக்கு ஊடாக செல்லும் நடை பாதைகளின் இருபக்கங்களிலும் நிலைநிறுத்தி மிகுந்த நம்பிக்கையோடு வழிபடுவதைக் காணலாம்.

### குழைகளும் இலைகளும் படைப்பு

தூரப் பயணம் செல்பவர்கள். மலையில் கொழுந்து பறிப்பவர்கள். கவ்வாத்து வெட்டுபவர்கள். என்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப தோட்ட மக்களும், அவ்வழியே வருவோர்களும் போவோர்களும் தங்களது நோக்கமும், நினைப்பும் வெற்றிகரமாகக் கைகூட வணங்குவது வழக்கம்!

குழைகளையும், இலைகளையுமே குழைதின்னி ஐயனாருக்குச் சார்த்தி கர்ப்பூரம், பத்தி பத்த வைப்பது முறையாகும். மலர்களையோ, பழங்களையோ இவருக்குப் படைக்காமல், பசுமையான குழைகளையே கிள்ளிப் படைப்பதற்குக் காரணம் குழையினைத் தின்னுபவர் இவர் என்பதே இம்மக்களின் திடமான முடிவாகும். இதனை ஒட்டியே குழைதின்னி ஐயனார் எனப் பெயர் வழக்கத்திற்கு வந்தது போலும். நோயாளிகளை ஆஸ்பத்திரிக்குச் சுகம்பெற கொண்டு செல்பவர்கள். ஏதாவது முக்கிய திட்டங்களை நெஞ்சிற் கொண்டு அவ்வழியே பயணம் மேற் கொள்வோர்கள். பள்ளி செல்லும் பிள்ளைகள். இப்படி எல்லாத் தரத்தார்க்குச் சுகம் பெற கொண்டு செல்பவர்கள். பயணம் முடித்து திரும்பி வரும் போது இதே போல் செய்து வழிபடுவார்கள். கிடைக்கும் வெற்றி குழை தின்னி ஐயானாரின் திருவருள் சக்தியே என்பது அவர்களுக்குள்ள முழுநம்பிக்கை. இக்குழைதின்னி ஐயனாரை எல்லா மதத்தவர்களும். இதயமாரப் பயப் பதக்தியோடு மேற் கூறிய முறையில் கை எடுத்து காரியம் கைகூட வரங்கேட்டு வணங்குதல் தோட்டங்களில் நாளாந்தம் காணப்படும் நடைமுறையாகும்.


உங்கள் நன்மதிப்பை 28 ஆண்டுகளுக்கும் மேலாகப் பெற்று தெய்வ வழிபாட்டுக்குத் துணையாக நிற்பது

**காவடி மார்க் - யானை மார்க்**

**கற்பூரம்**

சுடர் விடும் கற்பூரம் ஒளியிலே தெய்வீக ஒளிகண்டேன். பக்தி கமழும் கற்பூர நறுமணத்தில் தெய்வீக அருள் சுடர் கண்டேன். புனிதமான இல்லம் தோறும் நறுமணத்தோடு ஒளிதருவது காவடி மார்க். யானை மார்க் கற்பூரங்களே

கற்பூரம் என்று கேட்காதீர்கள்
**காவடி மார்க் கற்பூரம்**
என்று கேட்டு வாங்குங்கள்

தயாரிப்பாளர்கள்
**Mc. SONS GROUP OF COMPANIES**
672/3 GALLE ROAD (OFF) MAYURA MAWATHA,
LADY CATHRRIN ESTATE, RATMALANA.
PHONE : 636818

ஏக விநியோகஸ்தர்கள்
**பிரபா டிரேடிங் கம்பனி**
31 கபோஸ் லேன்,
கொழும்பு - 11
போன் - 329426 - 422750

இந்து கலாசாரத்துக்கு
எமது வாழ்த்துக்கள்

Renuka Industries

Importers & Exporters

Manufacturers of All Kinds
of
Aluminium Wares

170 -172. Old Moor Street,
Colombo -12.
Telephone : 435579

விலை
15/=

Registered as a Newspaper at the G. P. O - No. QD/19/NEWS/94

சகல நவீன அச்சக சேவைகளுக்கும் .......

# நந்தன் அச்சகம்

8, கொடுகொடல்ல வீதி
கண்டி.
தொலைபேசி: 08 - 23694

இச் சஞ்சிகை இந்து கலாச்சார மன்றத்திற்காக, வெள்ளவத்தை இலக்கம் 4 நெல்சன் பிளேசில் உள்ள பிறிண்ட் கிறாபிக்ஸ் நிறுவனத்தினில் அச்சிட்டு, கொள்ளுப்பிட்டி நெல்சன் ஒழுங்கை 39/ 23ம் இலக்க இல்லத்தில் வசிப்பவரும், இதன் ஆசிரியருமான திரு. ஏ. எம். துரைசாமி அவர்களால் வெளியிடப்பட்டது.